உள்ளமை விளக்கம்

ஆசிரியர்:

தொண்டி, மெய்ஞ்ஞானத் தோன்றல், ஆரிபுபில்லாஹ்,

மௌலானா அல்ஹாஜ்

S. ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப்

சிஷ்தீ காதிரீ

பட்டர்வர்த் — பினாங்கு

(மலேசியா)

1966

வெளியீடு 2.

1000—காப்பிகள்

இலவச வெளியீடு

முபாரக் அச்சகம், உத்தமபாளையம்.

தொண்டி, மெஞ்ஞானத் தோன்றல், ஆரிபுபில்லாஹ்,

அல்ஹாஜ் மௌலான

S. ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப்

சிஷ்தீ-காதிரீ.

பட்டர்வர்த் — பினாங்கு

மலேசியா.

பொருளடக்கம்.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

١ اَلْحَمْدُ لِمَنْ عَزَّ وَمَنْ جَلَّ جَلَالَا
لَا يَصْلُحُ اِلَّا لِتَعَالِيْهِ تَعَالٰى

٢ حَيٌّ اَزَلِيٌّ وَلَهُ ذَاتٌ قَدِيْمٌ
فَرْدٌ اَحَدِيٌّ سَبَقَ الْكُلَّ كَمَالَا

٣ بِالْمَجْدِ وَبِالْجُوْدِ وَبِالْجَدِّ تَجَلّٰى
مَا مَالَ عَنِ الْعَدْلِ وَلَا الْعَدْلُ مَلَالَا

٤ لَا حَدَّ وَلَا عَدَّ وَلَا شِبْهَ تَلِيْهِ
لَا ضِدَّ وَلَا نِدَّ وَلَا بُدَّ يُوَالَا

٥ لَا فَوْقَ وَلَا تَحْتَ وَلَا يُمْنَ يَمِيْنًا
لَا قَبْلَ وَلَا بَعْدَ وَلَا يُسْرَ شِمَالَا

٦ جِبْرِيلُ وَمِيكَالُ اَمِينَانِ عَلَيْهِ

جَاءَ لِيَهْدِيَهِ وَعَلَى الْكُلِّ كَمَالَا

٧ مَوْلَاىَ تَبَارَكْتَ بِعِزٍّ وَعُلُوٍّ

سُبْحَانَكَ بَيَّنْتَ حَرَاماً وَحَلَالَا

٨ وَاخْتَرْتَ عَلَى الْكُلِّ رَسُولًا قُرَشِيًّا

يَزْدَادُ عَلَى الْكُلِّ بِنَاءً وَمِثَالَا

٩ حَفَّتْ بِذَوِى الْعَرْشِ صُفُوفٌ وَصُفُوفٌ

لِلطَّاعَةِ يَسْعَوْنَ نِسَاءً وَرِجَالَا

١٠ مِنْ آدَمَ اِدْرِيسَ وَنُوحٍ وَخَلِيلٍ

هَارُنَ وَمُوسٰى وَعِيسٰى يَتَلَالَا

நன்றி

அல்லாஹ் ஜல்லவின் கிருபையால் இந் நூலை எழுத வேண்டுமென்ற அவா எமக்குப் பல வருடங்களாக மனதில் குடி கொண்டிருந்தது. அதற்கேற்ப எனது முரீதீன் களிலநேகர் எமது இவ்வவாவை அவசியம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். சென்ற 1954-ம் வருட மத்தியில் எமது அவாவிற்கும், அனுபவத்திற்கும் பொருத்தமாக இதனை எழுத ஆரம்பித்து, 1955-ம் வருட இறுதியில் முடித்தோம். எமது முக்கிய சிஷ்யர்களிலொருவரான ஜனாப் அல்ஹாஜ், கா. யாஸீன் ஸாஹிப் அவர்களின் ஆலோசனைப்படி நமது தாய்நாடாம் தமிழ் நாட்டில்மதுரைஜில்லா உத்தமபாளையம் மவ்லானா, மவ்லவி ஹாஜி S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவி) அவர்களின் முபாரக் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தோம்.

இந் நூலை நண்பர்களுக்கு இனாமாகவே விநியோகம் செய்து விடுவதென தீர்மானித்தோம். இந் நோக்கத்தைத் தெரிந்த எமது சிஷ்யர்கள் தாங்களாகவே மனமுவந்து அவரவர்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்தார்கள். அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகட்டும்.

உதவி செய்தவர்களின் நாமங்கள் வருமாறு:-

ஜனாப், அ. அப்துஷ் ஷுக்கூர் சாஹிப் சித்தார்கோட்டை (ராம்நாட்)

2. ஜனாப், ஹாஜி, ஹஸனர் ஸெராங்கு குமாரர் (முஹம்மது ஸெராங்கு கேரளா)

8. ,, V. N. M. இஸ்மாயில் சாஹிப் பெருங்குளம் (ராம்நாட்)

4. ,, P. M. S. ஸையித் முஹம்மது சாஹிப் கோட்டாறு (குமரி)

5. ,, A. K. பீர் முஹம்மது சாஹிப் திருப்பத்தூர் (ராம்நாட்)

6. N. S. அப்துல் மஜீது சாஹிப்

7. ,, K. A. காதிர் முஹ்யித்தீன் ஸாஹிப் முதுகுளத்தூர் (ராம்நாட்)

மேற்கண்டவர்களுக்கும், இந் நூலை ஆரம்ப முதல் கடைசி வரையில் முடிந்த அளவு சரிபார்த்து அச்சு வேலையை பூர்த்தி செய்ய உறுதுணையா யிருந்தவரும் (எமனேஸ்வரம்) பினாங்கு வாசியும், தஞ்சை ஜில்லா முத்துப் பேட்டையில் அடக்கமாயிருக்கும் மேன்மை பொருந்திய குத்துபு நாதர் அஷ்-ஷெய்கு தாவூத் (குத்திஸ ஸிர்ருஹு) அவர்களின் திருக் காரணச் சரித்திரம் "கஷ்புல் கராமாத்" எனும் அற்புத நூலை எழுதி வெளியிட்டிருக்கும் ஆசிரியருமான அல்ஹாஜ் கா. யாஸீன் ஸாஹிப் அவர்களுக்கும், இந் நூலை பொறுப்போடு அச்சிட்டுத் தந்த உத்தமபாளையம் முபாரக் அச்சகத்தாருக்கும் மேற்கண்ட எமது சிஷ்யர்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா ஈருலக பாக்கியங்களையும் ஈந்தருள்புரிவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்! ஆமீன்!

இன்னணம்,

1903-ஜாலான் மெங்குவாங், பட்டர்வர்த் P. W (மலேசியா) } S. ரஹ்மத்துல்லாஹ், ஸாஹிப் சிஷ்திகாதிரீ.

அநுபந்தம்

ஸுனு ஹிம்து

1. சீன்-சிர்ரு இருள் என்பது தாத்து என்றும் அஹது என்றும்,
2. நூன்-நூறு ஒளி என்பது சிபாத்து என்றும் வஹ்து என்றும்.
3. நூன்-நாறு நெருப்பு என்பது.
4. ஹ-ஹவாவு காற்று என்பது.
5. ம-மாஉ தண்ணீர் என்பது.
6. தே-துருபு மண் என்பது.

இந்த ஆறு எழுத்தும் ஆரிபீன்களிடம் ஆறு குறிப்புகளாம். அதாவது சீன எனும் சிர்ரிலிருந்து நூரென்னும் ஒளியுண்டாகி அவ்வொளிவில நின்றும் நார் என்னும நெருப்பு அகங்காரங் கொண்டெழுந்து தன் சுவாலையில நினறும் ஹவா எனும காற்றுண்டாகி, அக்காற்றின் குளிரால் 'மாஉ' எனும் தண்ணீருண்டாகி, அத தண்ணீரின் கொந்தளிப்பால் நுரையுண்டாகி, அந்நுரை இறுகி 'துருபு' என்னும் மண்ணுண்டாகி அம்மண்ணில் வைரம், வைடூரியம். கோமேதகம், புஷ்பராகம் போன்ற எண்ண முடியாத் திரயவிங்களும் தங்கம், பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகப் பொருட்களும் கற்கரடுகளும் பச்சை, சிகப்பு, வெள்ளை முதலிய வித வித மண்களும் மரங்களும் அம்மரங்களின் இலை, குலை, பூக்களும் காய்களும் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்புள்ள பழங்களும வேணுமான மருந்து வகைகளும் புழுப் பூச்சிகளும் பறவை இனங்களும் மிருகங்களும் இன்னும் எத்தனையோ வித விதமான படைப்புகளும்

எல்லாம் கோடி கோடி வருடங்களாகக் கூடிக்கூடி நாடி நாடியே வெளியாக்கி அவை அனைத்தும் தாத்துசொத்து அஸ்மா அப்ஆல்களாகி அவை அனைத்தையும் பொதிந்த மனுவென்னும் ஆதமை ஆண்டவன் படைத்து தாத்திலிருந்து சொத்து வெளியானது போல் ஆதமிலிருந்து ஹவ்வாவை வெளியாக்கினன்.

அவர்களில்

1- அம்மாரா வென்னும் நப்சு ஷய்த்தானியா என்றும்,

2- லவ்வாமா வென்னும் நப்சு ஹைவானியா என்றும்,

3- முல்ஹிமா வெனும் நப்சு மலக்கானியாஎன்றும்

4- மூத்மயின்னு வெனும் நப்சு ரப்பானியா எனவும்

5- ராளிய்யா வெனும் நப்சு ரஹ்மானியாவெனவும்

6- மர்ளியா வெனும் நப்சு சுல்த்தானியா வெனவும்

7- காமிலா வெனும் நப்சு இன்சானியா வென்றும் அமைத்தான்.

நப்சுகள் ஏழின் குணம்

1. அம்மாரா வெனும் நப்சு ஷய்தானின் குணமுள்ள கெடுதிகளேயே செய்யும். அதற்கு நன்மை செய்யத் தெரியாது. மனிதர் குணத்தைவிட்டு நீங்க வேண்டும்.

2. லவ்வாமா வெனும் நப்சு ஷைறவான்களின் குணமுள்ளது. கேடும் நன்மையும் கலந்து செய்யும். இது கேடாச்சே, இது நன்மையாச்சே என்ற பாகுபாடு அதற்கு இல்லை. தொழுகை நோன்பு போன்ற மற்ற அமல்களும் செய்யும். அது போல கோள், களவு, பொய், புறம்முதலான பாபச் செயல்களை விட்டு நீங்கா.

3. முல்ஹிமா வெனும் நப்சின் குணம் வணக்கம் புரிவது மட்டும் தான். இதற்கு வேறு பராக்கு இராது.

4. முத்மயின்ன வெனும் நப்சின் குணம். எவ் வேளையும் எஜமானின் சமுகத்தில் அடக்க ஒடுக்கமாக நிறப்பமான நம்பிக்கை கொண்டிருப்பது.

5. ராளியா வெனும் நப்சு ரஹ்மானின் குணங் கொண்டு எல்லா வகையிலும் அன்புள்ளதா யிருக்கும்.

6. மர்ளிய்யா வெனும் நப்சு நீதி தவறுததாக இருக்கும்.

7. காமிலா வெனும் நப்சு இன்சானில் காமிலான வர்களுடையது. الانسان سرى وانا سره இவர்களைத் தான் மலாயிகத்துகளிடம் அல்லாஹு தஆலா ஹதீது குத்சியில் திருவுளஞ் செய்திருப்பதாக ஆரிபீன்களால் சொல்லப் பட்டிருக்கின்றது.

காமிலீன்கள் என்பவர் யார்?

انا عرضنا الامانة على السموات والارض والجبال

இந்த அமானிதத்தை வானம் பூமி மலைகளில் எடுத்துக் காட்டி இதை நீங்கள் சுமந்து கொள்கின்றீர்களா? எனக் கேட்ட போது, நாங்கள் நீ சொல்வது போல் பிரமாண்டமானவர்களா இருந்த போதிலும் எங்களால் அவ்வமானிதத்தைச் சுமக்கத் தகுதி பெறமாட்டோ மென விலகிக் கொண்டார்கள்.

ஆதமே! நீர் சுமந்து கொள்கிறீரா எனக் கேட்ட போது ஆம் நான் சுமந்து கொள்கிறேன் என்று அந்த அமானிதத்தைச் சுமந்து கொண்டார்கள்.

தக்வா உடையவர்கள் சொர்க்கங்களிலும் அதனருகில் ஓடுகிற ஆறுகளிலும் உண்மை இருப்பிடமாகிய அல்லாஹ்வின சமுகத்திலும் தரிபடுகிறவர்களாவர்.

அந்த அமானிதத்தை மானிடர் மீது சுமத்தியதும்

واذ قلنا للملئكة اسجدوا لادم فسجدوا الا ابليس ابى

واستكبر وكان من الكافرين

மலக்குகளை அழைத்து
இப்லீசு நீங்கலாக மலாயிக்கத்துகள் அனைவரும் சுஜூது இட்டார்கள்.

அவ்வலுப்பம் தங்கிய அவ்வமானிதத்தை நாம் இவ்வுலகத்திற்கு வந்த பின் மறந்திடாமல் தரிசித்து எவ்வேளையும் அப்பிரகாசத்தைத் தொழுகை முதலான வணக்கங்களிலும் முன்னிலையாக்கிக் கொள்ளக் காமிலீன்களைத் தேடிக் கண்டு அவர்களிடம் கேட்டும் பார்த்தும்

உறுதி கொண்டும் வருவோமானால் நமது சக்ராத்தும் எளிதாகும். இஸ்றுயீல் (அலைஹி) வந்து அல்லாஹ் வின் உத்திரவு தங்களின் றூஹை வாங்கிவர. தாங்க ளென்ன சொலகிறீர்க ளென்ற போது எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நல்வருஷை ஷபாஅத்திலாக அல்லாஹ் வின் கிருபையால் வாங்கிப் போவீர்களாக என்றவுடன் மெல்லினமாக சோபனஞ் சொல்லி வாங்குவார்கள்; கொண்டு போய் அல்லாஹ்வின் சமுகஞ் சேர்ப்பார்கள். மலக்குகளே! எனது நல்லடியானுடைய றூஹை வந்து பாருங்களென ஆண்டவன் கூறியவுடன் மலக்குகள் வந்து பார்த்து சோபனங் கூறுவார்கள்.

இங்கு மவ்த்தானவர்களை எல்லோரும் சஞ்சலத் துடன் கழுவி குளிப்பாட்டிக் கபனுடுத்தி சந்தூக்கில் வைத்து பள்ளியில் கொண்டு போய்த் தொழுவித்துத் தூக்கிக் குழிக்குள் அடக்கி துஆ ஓதித் திரும்பும் போது கப்ருக்குள் முன்கர் நக்கீர் என்ற மலக்குகள் வந்து இந்த வாடிய முகத்தைப் பார்த்து மலர்ச்சியான வார்த்தைகள பேசி சொர்க்கத்துக்கு சீட்டுங் கொடுத்துப் போவார் கள். அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு கப்ரே என்னு டைய அடியான் இன்னான் மகன் இன்னானை நெருக்கித் தொந்தரவுகள் செய்யாதே! உன்னுடைய இருவிலாவும் கண்ணாடியாக ஆக்கிக் கொள்ளென்று உத்தரவிடப்படு மென்றும் சொல்கின்றார்கள். யௌமாகன் முடிவி விட்

டால் அங்கு எல்லா சிறப்பும் பெற்று திங்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு மண வைபவத்திலும் கூடி ஷபாஅத்தின் சிறப்பும் பெற்று அல்லாஹ் சுப்ஹானஹு தஆலாவின் அழியாப் பதியா கிய திரு லிக்காவையும் பெற்று பெரு வாழ்வு வாழ்வார் களாக ஆமீன்!

எல்லா வகையிலும் நாம் பரிசுத்தத்தோடு ஷஹா தத்தைத் திட்டப்படுத்தி அஷ்ஹதுக் கலிமாவைக் கலப் பறுதலுடன் இலேசாக ஓதி இல்முல் எக்கீனை ஐனுல் எக்கீனுக்கிக் கொள்வோமானுல் சுஜூதிடுகிறவர்களில் சீனுக்கு அறுபது ஜீமுக்கு மூன்று வாவுக்கு ஆறு தாலுக்கு நான்கு ஆக இந்த உம்மத்தில் இந்த எழுபத்தி மூன்று கூட்டத்தில் ஒரு கூட்டந்தான் மூஃமீன்களாகும். மற்ற எழுபத்திரண்டு கூட்டம் நரகவாதிகள்; ஹசதுகாரர்கள் ஹேக்கு எட்டு, சீனுக்கு அறுபது தாலுக்கு நான்கு ஆக எழுபத்திரண்டு கூட்டமும் நரகவாதிகள். முன் சொல்லி வந்த ஒரு கூட்டம் நுக்கத்தை விளங்கினது. ஜஸதென்றதில் உள்ள நுக்கத்தை விளங்கினவர்களா வார்கள். அந்நுக்கத்தை விளங்கினவர்களே தன்னை அறிந்தவர்களெனச் சொல்லப்படும். இதைப் பற்றித் தான் குர்ஆனில் உன்னை நீ பார்க்க வேண்டாமா? வென் றும் மற்றோரிடத்தில் எவன் இங்கே பார்க்கவில்லையோ அவன் குருடன். ஆகிரத்திலும் காணமாட்டான். பெருங் கை சேதத்திலும் ஆகிவிடுவானெனவும் ஆரிபீன் களும் நல்லவிளக்கமாகவும் துலக்கமாகவும் விபரித்தும்

விளங்கிக் கொள்ளாமல் தூங்குகிறார்கள். மய்யத்து அடக்குமே அப்போதுதான் விழிப்பார்கள். நெஞ்சம் படபடப்பாகும் அந்த வேளையில் எல்லாம் பாடுசாய்ந்து விடும். ஒன்றும் செய்து கொள்ள இயலாது. ரூஹு பிரியும் போது உன்னுடைய இந்திரியம் வெளியானால் ஜுனுபாகி விட்டாய் உன்னுடைய துடக்கை நீயே நீக்காமல் ஊரா ரெல்லாம் எவ்வளவு தண்ணீர் விட்டுக் கழுவினாலும் நீங்கவே நீங்காது கப்ரிலும் முன்கர் நக்கிரெனும் மலக்குகள் வந்தால் நீ ஏன் இங்கு நஜீசாகித் துடக்குடன் வந்தாய் என்று நெருப்பினால் உள்ள தண்டமெடுத்தோங்கி அடிப்பார்களே! அப்பொழுது இங்குள்ள உன் இனங்களும் சொத்தும் நல்லதும் ஒன்றும் ஒத்தாசை செய்ய இயலவே இயலாது கை சேதம். அங்கே அதாபுக்குள் அகப்பட்டு சஞ்சலப்படுவது எது தெரியுமா? நன்மைகள் செய்ய விடாமல் ரகசியமாகவும் பரகசியமாகவும் உன்னை மமதையாக்கிய அகங்காரங் கொண்ட அம்மாரா வென்னும் செய்தான் தான் அது மேலாம்பரமான ரப்பில் ஆலமீனில் ஹவா வென்னும் ஆசையை வைக்க விடாமல உன்னைப் பராக்காக்கிக் கெடுதல்களில உன்னை இழுத்து நரகில் தள்ளும். அதனுடன் நானென்னும் அகங்காரமாகிய உன்னுடைய மேலெண்ணெங்களும் உன்னை அதாபுக்குள்ளாக்கி நரக வேதனையில் சிக்குண்டு நாசமுறச் செய்யவும் அதற்கு ஆளாகாது. ஒரு காமிலான ஷெய்கைத் தேடி கதிபெற முயல்வது மானிடர் கடமை.

யா அல்லாஹ்! பொருள் வசதியைக் கொடுத்து எமது மானத்தைக் காப்பாற்றி யருள்வாயாக! வறுமையால் என்னை அவமானப் படுத்தாதே! உன்னிடம் உணவுக்காகவும் செல்வத்திற்காகவும் மன்றாடிப் பெற்றுக்

கொண்ட செல்வந்தர்களிடம் நான் உணவிற்காக உதவி தேடிச் செல்லத்தூண்டும், வறுமையால் எங்களைக் கேவலப் படுத்தாதே!

உன் படைப்புகளில் தீயவர்களின் தயவை எதிர் நோக்கும் இழுக்கிற்கு எம்மை ஆளாக்காதே! அப்பொழுது எமது தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களைப் போற்றவும் அல்லாதவர்களை தூற்றவும் வரும். அவ்விதம் எங்களை ஆக்காதே.

யா அல்லாஹ்! கேட்பவர்களுக்கு நிறைய வாரி வழங்கவோ அல்லது மறுக்கவோ முற்றிலும் தகுதிபெற்றவன் நீயே. மற்றவர் யாரும் கொடுக்கவோ தடுக்கவோ உன்னைத் தவிர கிஞ்சித்தும் தகுதி பெற்றவாரயில்லை யா அல்லாஹ்! உனக்கன்றி வேறு எப்பொருளுக்கும் எமது சிரங்களைப் பணிய வைக்காது சுஜூது செய்யாது எம்மைக் காப்பாற்றி யிருப்பது போல உன்னைத் தவிர வேறு எவரிடத்திலும் நாங்கள் தேவை படாமல் இருக்கவும் கிருபை செய்வாயாக!

யா அல்லாஹ் உன் ஈகையாகிய கொடை, அருள், பாக்கியம் ஆகியவைகளின் பொருட்டால் இந்த துஆவை உன்னிடங் கேட்கிறேன். அருளாளர்களில் மிகச் சிறந்த. உன்னிடமிருக்கும் பொருட் செல்வத்தால் எம்மை சீமானாக்கி உன்னைத் தவிர மற்றவர்களிடம் நாங்கள் தேவைப் படாமல் இருக்க அருள் புரிவாய்! எமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்கள் கிளையார் தோழர்களுக்கும் உன்னுடைய சலவாத்தும் சலாமும் உண்டாக ஆமீன்!

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	21	தனித்திட்ட	தனித்திட்டதில்
..	23	தனித்திட்ட	தனித்திட்டநீ
7	6	கண்ஜ	கண்ஜன
..	24	ناظرا	ناظرة
8	26	சத்தர்	சத்ரா
9	22	فذاتى	بذاتى
10	4	مرأ	مرئى
11	14	ஞாபமூட்டி	ஞாபகமூட்டி
18	27	ணைக்	ணைங்
24	25	அவ்விதத்	அவ்விதச்
43	17	இந்த	இது

بسم الله الرحمن الرحيم

الحمد لله نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه
ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات أعمالنا من يهده
الله فلا مضل له ومن يضلله فلا هادي له ونشهد ان لا اله
الا الله وحده لا شريك له ونشهد ان سيدنا محمدا عبده ورسوله

நூன்முகம்

அஊதுபில்லாஹிஸ் ஸமீயில் அலீம்; மினஷ்ஷைய்த்தானிர் ரஜீம்.
பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

புகழென்ற புகழெல்லாம் அல்லாஹுத் தஆலா ஒருவனுக்கா யிருக்கும். அவன் புகழாகவும் புகழ்பவனாகவும் புகழப்பட்டவனாகவும், புகழுக்குட் புகுந்த புகழாகவும் புகழ்கண்ட பூரணன் — பராபரனாகவுமிருக்கிறான். அவனாகிறவன், உவமானங்களைக் கொண்டு நிதானிக்கவோ, ஒப்புவைத்து ஒரு வஸ்துவைப் போல் குறித்து வரைந்து வைக்கவோ முடியாது, தனித்து நின்ற அல்லாஹுவென்னும் திரு நாமத்தில் நிறைந்தவன்.

அவன் உரைத்த சலாமும் சலவாத்தும் அவனின் உள்ளமையுருவோடு வெளிவந்த திருத் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் சந்ததியார்கள் மீதும் தோழர்கள் மீதும் உண்டாவதாக!

நந் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கிடையில் இக்காலத்திற் கேற்றதுபோல், ஞான யோகக் கிரியைகளைத் தெளிவாகக் கண்டறிந்து கொள்ளக் கூடிய கித்தாபுகளோ புத்தகங்களோ தமிழ் பாஷையில் தாராளமாய்க் கிடைக்காமல் மக்கள் தத்தளிக்கிறார்கள். அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக வேண்டி, தொண்டி மாநகரின் மவ்லானா ஷெய்கு மீரான் ஒலியுல்லா சாஹிபுல் காதிரிய்யுல் சிஷ்த்திய்யு, தபக்காத்திய்யு, ஷுத்தாரிய்யு, ரஹ்மஹுல்லா அவர்களின் மகனும், அல்ஹாஜ் ஷெய்கு ரஹ்மத்துல்லா சாஹிபு என்னும் நாமத்தானுமாகிய நான் பாவமென்னும் கடலில் வீழ்ந்து மூழ்கிப் பரதவிக்கும் போது, எனைப் படைத்த பராபரனாகிய அல்லாஹு சுபுஹானஹு வதஆலா அவனுடைய அன்புகொண்டு ரஹ்மத்தென்னுங் கடலில் தூக்கி எறிந்தான். அக் கடலில் விழுந்து நீந்தி விளையாடி முக்குளித்து ஆணி முத்தெடுத்து விழுங்கியவுடன், அவனுடைய கஷ்பு என்னும் ஞானவுதிப்பில் நின்றும் ஓர் கசகசா அளவு என்னுடைய இருதயத்தில் உதயமாயிற்று. உடனே வெளியில் வந்து, 'யா,ஹுஹக்' கென்று கூவினேன். அக்குரல் கேட்டு ஆஷிகீன்கள் என்னிடம் வந்து கூடினர். அவர்களுக்காக ஞான இரகசியங்களடங்கிய இந் நூலை எழுதினேன். இதன் மூலம் அல்லா அவர்களின் இருதயங்களைப் பிரகாசிக்கச் செய்வானாக!

இதன் பின் எழுதியுள்ள அப்ஜத் இலக்கங்களை நன்றாக ஆராய்ந்து, சிறு பிள்ளைகளும் பெரியவர்களும் பாடஞ் செய்து கொள்வதுடன் மத்தென்பதென்ன? ஷத்தென்பதென்ன? ஹம்சென்பதென்ன? நுக்கத்தென்பதென்ன? சுக்கூனென்பதென்ன? சபரு என்பதென்ன? சேரு என்பதென்ன? பேஷ் என்பதென்ன? தோஸபரு என்பதென்ன? தோஸேரு என்பதென்ன? தோபேஷ் என்பதென்ன? ஆயத்து என்பதென்ன? முத்தலக்கு என்பதென்ன? ஜாயிசு என்பதென்ன? வென்றும் இந்தப் பதினான்கு இல்மும் நம் ஜடலத்திலுள்ளவைகள்தான் என்றும், இவை இன்னும் எவ்வளவு பாரதூரமானவை என்று உணருங்கள்! விளங்குங்கள்!!

மத்து, ஷத்து, ஹம்சு நுக்கத்து, சுக்கூன், சபறு, சேறு, பேஷ், தோஸபறு தோஸேறு தோபேஷ், ஆயத்து, முத்தலக்கு, ஜாயிசு ஆகிய பதினான்கு எழுத்தும் பதினான்கு இல்மு. இந்தப் பதினான்கு இல்மும் நமது றூஹும் உறுப்புகளுமாயிருக்கும் இவைகளை அறிய முக்கியம் தெரிந்துகொள்ள வேண்டியவை ஜாயிசாயிருப்பது இந்தப் பதினான்கு இல்மும்மாம். அஹதுக்கு இலக்கம் அலிபுக்கொன்று, ஹேக்கு எட்டு, தாலுக்கு நான்கு ஆகக் கூடியது பதின்மூன்று; உஹதுக்கு இலக்கம் அலிபுக்கொன்று, ஹேக்கு எட்டு, தாலுக்கு நான்கு ஆகக் கூடிய இலக்கம் பதின்மூன்று; வாஹிதுக்கு இலக்கம் வாவுக்காறு, அலிபுக்கொன்று, ஹேக்கெட்டு, தாலுக்கு நான்கு ஆகப் பத்தொன்பது: ஆக மொத்தம் நாற்பத்தைந்து. ஆதம் என்பதுக்கு இலக்கம், அலிபுக்கொன்று தாலுக்கு நான்கு, மீமுக்கு நாற்பது ஆக நாற்பத்தைந்து.

வுஜூது க்கு இலக்கம், வாவுக்காறு. ஜீமுக்கு மூன்று வாவுக்காறு, தாலுக்கு நான்கு ஆகப் பத்தொன்பது.

இதன் பின் வருகிற எழுத்துக்களின் இலக்கங்களைச் சரிபார்த்து மனதில் ஆக்கிக் கொள்ள வேண்டியது.

அப்ஜது இலக்கம்

ز ٧	و ٦	ه ٥	د ٤	ج ٣	ب ٢	ا ١
ن ٥٠	م ٤٠	ل ٣٠	ك ٢٠	ى ١٠	ط ٩	ح ٨
ش ٣٠٠	ر ٢٠٠	ق ١٠٠	ص ٩٠	ف ٨٠	ع ٧٠	س ٦٠
غ ١٠٠٠	ظ ٩٠٠	ض ٨٠٠	ذ ٧٠٠	خ ٦٠٠	ث ٥٠٠	ت ٤٠٠

எழுத்து		இலக்கம்	எழுத்து		இலக்கம்
அலிப் ا	—	1	வாவு و	—	6
பே ب	—	2	ஸே ز	—	7
ஜீம் ج	—	3	ஹே ح	—	8
தால் د	—	4	தோய் ط	—	9
ஹே ه	—	5	ஏ ى	—	10

எழுத்து			இலக்கம்	எழுத்து			இலக்கம்
காப்	ك	—	20	ரே	ر	—	200
லாம்	ل	—	30	ஷீன்	ش	—	300
மீம்	م	—	40	தே	ت	—	400
நூன்	ن	—	50	தே	ث	—	500
ஸீன்	س	—	60	கே kh	خ	—	600
ஐன்	ع	—	70	தால்	ذ	—	700
பே F	ف	—	80	ளாது	ض	—	800
ஸாது	ص	—	90	ளோய்	ظ	—	900
காப்	ق	—	100	ஙைன்	غ	—	1000

றூஹு-என்பதின் இலக்கம், இருநூற்றுப்பதினன்கு

ஷுஹூது-என்பதின் இலக்கம் முந்நூற்றுப் பதினைந்து

அஷ்ஹது-என்பதின் இலக்கம். முந்நூற்றுப் பத்து.
சுஜூது-என்பதின் இலக்கம், எழுபத்து மூன்று.
ஹசது-என்பதின் இலக்கம், எழுபத்திரண்டு.
ஜசது-என்பதின் இலக்கம், அறுபத்தேழு.

அல்லாஹ்-என்பதின் இலக்கம், அலிபுக்கு ஒன்றும், லாமுக்கு முப்பதும், மற்ற லாமுக்கு முப்பதும், மற்ற அலிபுக்கு ஒன்றும், ஹேக்கு ஐந்தும் ஆக அறுபத்தேழு

முஹம்மது-என்பதின் இலக்கம், தொண்ணூற்றிரண்டு.

அஹது-என்பதின் இலக்கம், பதின் மூன்று.
உஹது-என்பதின் இலக்கம், பதின் மூன்று.
வாஹிது-என்பதின் இலக்கம், பத்தொன்பது.
ஆதம்-என்பதின் இலக்கம், நாற்பத்தைந்து
வுஜூது-என்பதின் இலக்கம், பத்தொன்பது.

இதன் பின்னுள்ள பாடல்

நாலெழு நாலாறு நான் மூன்றும்
ஒரு மூன்றில் நறை வீசும்
ஐனுயினோர் நூலான மஅரிபா
நாலான பாதைக்கும் நூருகுமீமா
யினோர் காலாறில் நடு நின்று
காட்சிக்குள் வெளியான
ஹக்கெங்கள் றப்பாயினோர்
மேலான செய்யிது முஹம்மது
புகாரிமிர் அத்துல் ஆரிபிறு

இப் பாடலில் வருகிற கணக்கு ஆகக் கூடியது அறு பத்தேழு. அதாவது, இருபத்தெட்டும் இருபத்தி நாலும் நான் மூன்று பன்னிரண்டும் ஒரு மூன்றும் ஆக அறுபத்தேழு, இந்த அறுபத்தேழும் அல்லாஹ் என்னும் இசுமில் பொதிந்துள்ளது.

இதன் பின் வரும் சிபத்து இருபதும் 'குன்' கொண்ட மணியாகும் நீ. கூறிட்டால் நாலைந்தாகும் நீ. தன் பங்கினில் ஆறுகும் நீ. தனித்திட்ட தாணுகும் நீ. தன்னெளிவினில் ஏழாகும் நீ. தஷ்பீஹிலும் ஏழாகும் நீ. மங்காமலென் மனமாளும் நீ. மஹ்பூபுயாமஹ்பூபு நீ. இந்த ஒரு பாடலில் இருபது சிபத்துகளும் நிரம்பிவிட்டது.

ஐனுக்குள்ளே பொருளான
அஹதிறொளி துலங்கி
ஆலமெல்லாம் உன் வாசம்
வீசுதே அல்லாஹூ
வேத புராணத்தில்

'இந்தக் கண்ணா கண்ணுக்குள்ளே இயல்பாம்'
பத்துக் கண்ணுண்டு மென்றார்:

இப்படிக் கொத்த கண்ணானதை இயல்பறியாதோர் மூமினல்ல துப்புரவான கலிமாவிலேதோற்றும் ஹூவான கண்ணானதிற் செப்புங் கண்ணாடி நடுப்படவே சிறக்கும் லய்லாவின் பெண்ணானதைத் தப்பற நோக்கியறியாதவர் தவ்ஹீதறியாத முட்டாள்களே. (பெரிய நூஹூவலியுல்லா பாடியது.)

அஷ்ஹதுக்கு இலக்கம், முந்நூற்றுப் பத்து.

ஹசதென்பதுக்கு இலக்கம்72, எழுபத்திரண்டு கூட்டம் நரகவாதிகள்.

சுஜூதுக்கு இலக்கம். எழுபத்தி மூன்று கூட்டம் இதிலொன்றுதான் மூமின்.

ஐசது என்பதுக்கு ஜீமுக்கு மூன்று, சீமுக்கறுபது தாலுக்கு நாலு ஆகக் கூடியது அறுபத்தேழு நுக்கத்தை விளங்கிய கூட்டம்.

அல்லாஹ்வென்னும் இசுமுக்கு இலக்கம் அறுபத்தேழு இது தீர்மானம்.

مِرْآةُ وَجْهِ الَّذِى تَهْوَاهُ قَلْبُكَ كُنْ لِنَحْوِهِ نَاظِرًا تُبْصِرْ مُحَيَّاهُ

நீ ஆசை கொண்டிருக்கிறுயே அந்த ஒருவனுடைய முகம் பார்க்கும் கண்ணுடியாகிறது உன் கல்பு தானுயிருக்கும். அந்தக் கல்பிற்கு நேரே பார்க்கிறவனுயிருந்துகொள் அந்தக் கண்ணுடி நீ ஆசை கொண்டவனுடைய முகத்தைக் காண்பித்துத் தருமென்றபடியால்; பார்க்கும்போது பார்க்கிறதும் பார்க்கப்பட்டதும் ஒன்ருய், அதில் நின்றும் அறிவு பிறந்து அறியும்; இப்படி ஒன்றை ஒன்ருய்த் திரும்பிப் பார்க்கப் பார்க்க, பார்க்கிறதும் பார்க்கப்பட்டதும் ஒன்ருய், அதில் நின்றும் அறியும் அறிவு ஒன்று பிறந்து பிறந்து அறியும். தடவைக்குத் தடவை அறிகிற அறிவு மெலிந்து மெலிந்து வரும். இப்படி மிஃருஜாக ஏறி ஏறிக் கடைசியில், அறிய அறிவு அறிந்தோமென்கிற விபரந் தோன்ருமல் மெலிந்திருக்கும்; இதை இல்முல் முத்லக் கென்று சொல்லப்படும். இந்த இல்முல் முத்லக்குத் தான் வுஜூதுல் முத்லக்கு வெளியாகிற மல்ஹருமாய் முஹம்மதியாவென்கிற அறிவுமாய், நாங்கள் மேலான ஹரு

لَقَدْ كُنَّا حُرُوفًا عَالِيَاتٍ ۝ نُزِّلْنَا فِي سُطُورٍ سَافِلَاتٍ

பென்கிற கலிமாவாக இருந்து வந்தோம்; கீழ்மையான அயியான்தாபித்தாவில் தரித்து வாஹிதிய்யா வென்கிற மல்ஹரு ஆதமிய்யாவிலும், றூஹுல் குத்சியென்கிற, றூஹுல் முஹம்மதிய்யா வென்கிற றூஹாகிய றப்புல் அர்பாபிலும், நூறு முஹம்மதிய்யாவாகிய அக்ல் அவ்வலென்கிற சஹாபுல் வஹியி-வஹியென்கிற வேதா மேகத்திலும், அஸ்மாயிலாஹி யென்கிற இருபத்தேழு அஸ்மாவாகிய மர்பூபிலும், ஆலம் அர்வாஹ், ஆலம்மிதால், ஆலம் அஜ்சாம், ஆலம் இன்சான் சத்தர் என்கிற வரிகளில் இறங்கினேம் என்று.

முஹிய்யித்தீனிப்னு அறபீ ரலியல்
லாஹு அன்ஹு சொன்ன கலிமா
வென்கிற ஹுருபாகிய, வுஜூது,
இல்மு, நூறு, ஷுஹூது

என்று சொல்லப்பட்ட இஃத்திபாருசல்பி என்கிறதாக இல்முல் முத்லக் தோன்றின படியால், இந்த இல்முல் முத்லக்கு வுஜூதுல் முத்லக்காக கரைந்து போம். இந்தப்படி கரைந்து போனால், நிரப்பமாயிற்று; அஷ்ஹது அன்லாயிலாக இல்லல்லாஹு நிரப்பமாயிற்று;

அவனும் துப்புரவானவன். இப்படியான பின், வுஜூதுல் முத்லக்கு இவனை இல்லாதவனாக, வுஜூதாகத் தரிபடுத்தி, பக்காவில் திருப்பி, யேறின துறையின் வழியே இறக்கி, தஷ்பீஹ் முகமும் வுஜூதாகத் தரிபடுத்தின பின் உபூதிய்யத்து கொண்டு வஹ்தானிய்யத் தென்கிற மறதியான கடலில் அமிர்தங்களை அருந்தினவன், தனக்கு அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு நிரப்பமான தரிபாடாக நிற்பான்.

وَفِى صَحْوِى بَعْدَ الْمَحْوِ لَمْ اَكُ غَيْرَهَا

நான் பனாவான பின், பக்காவானதளவிலும், அந்த வுஜூதிய்யா என்கிற மஹ்பூபு நாயகி அல்லாதவனாயிருக்கவில்லை.

وَذَاتِى فِى ذَاتِى اِذْ تَجَلَّتْ تَجَلَّتْ

அவள் வெளிப்பட வேணுமென்கிற போது என் உள்ளமை அது தன்னில் அவளாக வெளியாகும்.

تَجَلَّتْ فِي تَجَلِّيهَا الْوُجُودُ لِنَاظِرِي

அந்த மஹபூபு நாயகி வெளியாகிறதிலே என்னுடைய உள்ளமை யென் பார்வைக்கு வுஜூதாக வெளியாயிற்று.

فَفِي كُلِّ مَرْأًى اَرَاهَا بِرُؤْيَتِي

ஆனபோதே, காணப்பட்டவை அடங்கலிலும் அவள் தன்னைத்தான் காண்கிறது என் தன்னைக் காண்கிறதா யிருந்தது. ஆதலால், இப்படி அறிவை அறிந்து, உறூஜூம் நுஸூலுமாய் ஏற்ற இறக்கம் செய்து, ஹக்கையும் கல்க்கையும் ஒன்றுமல்லாமல் இரண்டுமல்லாமல், தாங்கள் அதமாக ஒரு பார்வையாகக் கண்டு அறிந்தார்களே, அவர்கள் கூட்டத்தில் நம்மைச் சேர்த்து நல்லுதவி செய்வாராகவும்.

மவ்த்துக்கு முன் மவ்த்தாகிக் கொள்ளுங்கள் என்ற நாயக வாக்கியத்தைக் கவனியாமல் தூக்கத்தில் இராதீர்கள். முழுக்கு விதியாகுமுன் முழுகிக் கொள்ளுங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அவ்விதம் மவ்த்துக்கு முன் மவ்த்தாகுவது என்பதை நல்ல அனுபவசாலிகளான பெரியோர்களை அடுத்து அவர்களுக்குப் பணிவிடை செய்தால் அவர்களிடமிருந்து அன்பு கனிந் தொழுகும்; அதை எதிர்பார்த்திருந்து பழகிக்கொள்.

மாயை முழுக்கு விதிக்கு முன் முழுகுவதாவது, ஒவ்வொரு விநாடியும் உன்னுடைய நபுசென்னும் எண்ண

மாகிறது பலவிதமான ஆசாபாசங்களில் போய்ப் போய் விழுகின்றது. அதைக் கட்டுப்படுத்தக் கூடிய உபாயத்தைத் தேடிக் கொள்வதாகும்.

அதற்கு உபாயமாவது வாசியென்னும் வாகனத்தில் அதாவது இந்த நாசச் சரீரத்தை வாசியிற்றீட்டிடில் நாசத்தை யண்ட ஒட்டாதே—நல்ல யோசனை செய்யும் குணங்குடி வந்திடில் யோகமுனக்குக் குன்றுதே; ஒரு மாசற்ற யாஹூவென்றேதே.

அப்படி, யா வென்றும், ஹூ வென்றும் இந்த வாய் விட்டோதுவதல்ல; அந்த வாசிப் பழக்கமுள்ள மகான்களை அடுத்துத் தான் பழகிப் பழக்கஞ் செய்து கொள்வதை "சதா காலமும் சறுகாமல் ஹேவாவைக் கொருத்தூஞ்சலாடி குதாயிடங் கூடியே" என்றெல்லாம் மகான்கள் உங்களுக்கு ஞாபமூட்டியிருக்கிறார்கள். அதைக் கவனியாது மனம் போன போக்காகத் தடுமாற்றம் அடைகின்றீர்கள்! அதாவது தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்குகின்றீர்கள்!

அதாவது சக்கராத்ஹால் முடுகுமே அப்போது விழிப்புண்டாகும்; கண்ணும் படபடத்தாடும்; நெஞ்சும் துடிதுடிக்கும்; துன்யாவின் ஆசாபாசங்களெல்லாம் உருவெடுத்து வந்து ஆசையைக் கிளப்பி, மோக வலையை வீசி உங்களின் இந்திரியத்தை வெளியாக்குவதற்குள்ள வடிவங்களாக வந்து ஆண்களையும் பெண்களையும் முழுக்காளிகளாக ஆக்குவித்திடும்.

அவ்விதம் துடக்கானல், ஊராரெல்லாங் கூடி கழுவினலும் இந்தத் துடக்கு நீங்கவே நீங்காது. இஸ்ரு யீல் (அலை) இழுக்கும் இழுப்பில் முழுக்காகி விட்டதே யானல் "பாவிகட்காயிரம் புத்தி சொன்னலும் படைத் தோனை வணங்கார்கள்.

பணங்காசையும் பணம் உள்ளவனையும் சொத்துச் சுகம் மற்றும் பொருள்களையும் வணங்குவார்கள். எமன் நோவினை செய்யும் பொழுதல்லோ நினைப்பார்கள். அந்த நீசர்கட்க் கென்ன சொல்வேன்!"

அந்த வேளையில் உங்களைக் கடுங்குற்றக் காரர்களை இழுத்துச் செல்லுவது போல் இழுத்துச் செல்லப்படும். அந்த வேளையில் உதவி செய்வார் யாரும் வரமாட்டார்கள்; கை சேதம் கை சேதமே, என் தலை விதி என்றெல்லாம் புலம்பிப் புலம்பித் தவிப்பதை நினைத்து நினைத்து. இப் பொழுதே அதற்காகுமான அமல்கள் செய்ய வேண்டிய வைகளைத் தெரிந்தெடுத்து அமல் செய்து வந்தோமானல் குற்றக்காரராக மாட்டோம். நம்மிடம் அறிவித்துத்தான் நம்முயிரை இஸ்ரயீல் (அலை) வந்து கைப்பற்றுவார், வெண்ணையில் மயிரைப் போட்டெடுப்பது போல் அமைதி யாக உயிரை வாங்குவார்.

அப்பால் வெகு ஜனங்கூடிக் குளிப்பாட்டிக் கபனு டுத்தித் தொழுவித்துத் தூக்கிக் குழிக்குள் அடக்கஞ் செய்து துஆ ஓதி அவரவர் இல்லம் போகத் திரும்பும் வேளை, கபுருக்குள் முன்கர்நக்கீர் வந்து விடுவார்கள். வெகு மகிழ்ச்சியாக சுவால்கள் நடக்கும்; போற்றிப் புகழ்ந்து நல்மாராயஞ் சொல்லி, வேண்டிய சலுகைகள்

நடக்கும். அவர்களுக்கு நபியூனுசு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கடலில் மீன் வயிற்றில் அம்மீனின் இரண்டு விலாவையும் கண்ணாடியாக்கி, அம் மீனுக்கு அல்லாஹ் உடைய உத்தரவு; மீனே! உன் வயிற்றிலிருப்பவர் என்னுடைய நபியூனூஸ்; அவருக்கு யாதொரு தொந்தரவும் கொடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டது போல், இந்தக் கபுராளிக்கும், பூமியே! இப்போது உன்னிடம் வந்திருக்கும் என்னுடைய நல்லடியானை நீ யாதொரு தொந்தரவும் செய்யக் கூடாது என்று கட்டளை பிறப்பிக்கப்படும். அந்தக் கபுரையும் இரு விலாப் புறமும் கண்ணாடியாக்கப்பட்டு கபுருளி இரு புறமும் பார்த்து மகிழ்வார்கள். அப்போதில், நபியூனுஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் மீன் வயிற்றிலிருந்து தஸ்பீஹூம் தஹ்லீலும் செய்து கொண்டிருந்தார்களே, அவ்விதமாக இந்தக் கபுருடையவர்களும் தஸ்பீஹூம் தஹ்லீலும் செய்து கொண்டே இருப்பார்கள்!

இன்னும் நபி உஸைறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள், உண்பதற்கு உணவுப் பொட்டலமும் எடுத்துக் கொண்டு ஒரு கோவேறு கழுதையின் மேல் சவாரியாகி, ஒரு வனத்திலிறங்கி, கோவேறு கழுதையை ஒரு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு, உணவுப் பொட்டலத்தை அவ்விடத்திலேயே வைத்துவிட்டுக் கொஞ்சம் சயனித்தார்கள். அல்லாஹூ சுப்ஹாஹூவத் தஆலா உஸைரே! என்று கூப்பிட்டான்; யாரப்பல் ஆலமீனே என்றெழுந்தார்கள்; எவ்வளவு நேரம் தூங்கினீரென்று கேட்டான்; சிறிது நாழிகை தூங்கினேனென்றார்கள்; நல்லது போனீர் உம்

மிருப்பிடத்திற் சென்றான். கொண்டு வந்த உணவு வைத்
தவிடத்திலேயே இருந்தது. என்னுடைய கோவேறு
கழுதையைக் கட்டி வைத்தவிடத்தில் காணோமே நாயனே
என்றார்கள். உம்முடைய கோவேறு கழுதை செத்து
உக்கி மடிந்து போயிற்று: கட்டி வைத்த விடத்தைப் பாரு
மென்றான்; பார்த்தார்கள். அக் கழுதையின் கடைவாய்ப்
பல்லொன்று கிடந்தெடுத்தார்கள். அப் பல்லும் நொருங்
கித் தூளாகிவிட்டது. ஆகவே உஸைறு அலைஹிஸ்ஸ
லாம் கண் அயர்ந்தது நூறு வருஷ காலம். கல்புக் கண்
விழித்தவர்களாக, தஸ்பீஹூம் தஹ்லீலும் செய்தவர்க
ளாக உறங்கினார்கள், கழுதையையும் எழுப்பிக் கொடுத்
தனுப்பினான் றப்பான நாயகன். அஸ்ஹாபுல்கஹ்பு அவர்
கள் அல்லாஹ்வில் அடைக்கலம் புகுந்தார்கள். ஒரு
குகைக்குள் புகுந்தவர்களை முந்நூற்று ஒன்பது வருடம்
குகைக்குள் புரண்டு புரண்டு படுக்க வைத்துக் காப்பாற்றி
னான் இரட்சகன். இவர்கள் சில நாழிகையாகத்தான் தூங்
கினவர்களாக நினைக்கத் தக்கதாகவே இருந்ததால், கபுரு
டைய சீதேவித்தனத்துடைய ஹாலும் இவ்விதமேயாகும்.
அப்பேர்க் கொத்தரப்பில் ஆலமீனை அல்லாஹ் சுப்ஹான
ஹூவத் தஆலா எவ்வளவு சிறப்புடைய நாயகன்? அவன்
நம்மை இந்த மனு ஜன்மமாய் அமைத்தானே அதை
நினைத்து, அவனுக் கஞ்சிப் பயந்து, கெஞ்சி அழுதழுது
வணக்கம் புரிந்துவர அதிருஷ்டம் வேண்டும். அவன்
நமக்குச் செய்த உபகாரத்தை மறந்து மனம்போன போக்
காகப் போவோமானால், நாம் செய்த கெடுதிகளே வந்து
நமக்குப் பலவிதமான ஆசைகளை யூட்டி, இச்சையைக்
கிளப்பிவிட்டு, நம்மைத் துடக்கான முழுக்காளியாக்கு

வித்திடும். இங்கேயே அத்துடக்கை நீக்காமல் மரித்தோ மாஞல், ஊராரால் கழுவப்பட்டாலும் அத் துடக்கு நீங் கவே நீங்காது.

கபுரறைக்குப் போனவுடன், முன்கர் நக்கீரென்னும் மலக்குகள் வந்து, கண்கள் இரண்டும் நெருப்புப் பொறி சிந்த நம்மைக் கடுங்கோபாக்கினியுடன் பார்த்து நீயேன் இங்கே துடக்காளியாக வந்தாயென்று, பெருந்தண்ட மெடுத்தோங்கி அடிப்பாரே! கைசேதம்! கைசேதமே!! அழுகை நரகத்தில் மெழுகுபோலுருகுவார் அனியாய மென்ன சொல்வேன்!!!

சொல்லச் சொல்ல சுணை வராது
காண்–சுன்னத்ஜமா அத்துக்கல்லாது
மற்ற–எல்லா மெழுபத்திரண்டு
கூட்டம்-இப்படி யாவார்கள் கால் சறுகி
முத்திலுதித்திடும் முஸ்தபா நன்னபி
முறையான மார்க்கமிது சொன்னவர்
ஹம்ஸா லெப்பை என்றறிந்து கொள்வீர்

கலிமாவை கல்பில் உறுதிகொள்வ தென்பதாவது, ஏடுகளில் எழுதியிருப்பவைகளைப் பார்க்கின்றோமே அது போல், நம்மிலும் நன்றாக உற்றுப் பார்ப்பது. கலிமாவே அவஞக வந்து, இவஞகி. யிவஞகிவிட்டான் இவஞகப் போஞல், அதாபுக் குள்ளாவான். திரும்ப அவஞகிக் கொள்வாஞஞல், லிக்காவில் ஜம் ஆகிவிடுவான். அது தான் அழியாப் பதியெனச் சொல்வது.

இந்த உடம்பென்னும் ஜடலத்தை உசுப்பி ஆட்டும் செயல்கள் அடங்கலுடைய தத்துவங்களும் றாஹுக் கல்லாது ஜடத்துக்கல்ல.

இஜ் ஜடலம் ஒரு வாகனம்; இவ் வாகனத்திலேறி சவாரி செய்கின்ற அரசன் றூஹு; இந்த றூஹென்னும் அரசன் இந்த வாகனத்துக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் இருக்க இடமும் படுக்கக் கட்டிலும், மற்றுமுள்ள சகிப்புகளெல்லாந் தந்துதவுகின்றது. இதை நினைத்து அந்த ஜடலம் அந்த றூஹுக்கே வழிப்பட்டு நடக்குமானால் அதுக்கு அழிவே வராது.

அப்படியல்லாமல் ஷைத்தானென்னும் நபுசுக்கு வழிப்படுமாகில், அழிவே யேற்பட்டு நாற்றமாகி அதா பையே அனுபவிக்கும். இதை நன்றாக ஆலோசித்து அல்லாஹ் ஒருவனுண்டென்று அஞ்சி வணங்கி, எல்லாமவ னென்றிருதயத் தெண்ணிக் கொள்வாயே யானால், பய மேதுமில்லையப்பா. காலனாகிய மலக்கு வந்தாலும், நம் முயிரை நம்மிடம் அறிவித்துத்தான் வெண்ணெயிலிட்ட மயிரை இழுப்பது போல் யாதொரு வருத்தமுமில்லாமல் மிருதுவாகப் பெற்றுக் கொண்டு போய் அல்லாஹ்வின் சமுகம் சமர்ப்பிப்பார். அல்லாஹ் ஜல்லஷானஹுவத் தஆலா மலக்குகளே! வந்து பாருங்கள் என்னுடைய நல் லடியானுடைய வஜிகரத்தை என்றவுடன், மலக்குகள் வந்து பார்த்து மர்ஹபா யா மர்ஹபாவெனச் சோபனஞ் சொல்லுவார்கள். இவ்விதமாகிய மவ்த்தை ஆதரவு வைத்துத், தொழுகையை ஒரு நாள் ஒன்றுக்கு ஐந்து வேளை பர்லு பதினேழு ரக்அத்தும் அதற்குள்ள சுன்னத்து களும் மற்றுமுண்டான வணக்கங்களையும் முடித்து, முதல் உள்ளவர்கள் வருஷம் தோறும் கணக்குப் பார்த்து நாற்பதுக் கொன்று விதம் சக்காத்தென்னும் ஏழை வரி யையும் ஈந்து, றமலான் மாதம் நோன்பிருந்து, ஹயாத்

தில் ஒரு விடுத்தம் ஹஜ்ஜூம் செய்வது ஆண் பெண் இருபாலார் மீதும் சுமத்தப்பட்ட கடமையாகும்.

கலிமாவை நன்ருகத் தெளிவுபடுத்துவது அவசியமானது; ஷஹாதத் தென்னும் திட்டப்படுத்துதல், அஷ்ஹது பிசகுதலில்லாமல் குருவானவர்களிடத்திருந்து தெரிந்து, தெளிவு பெறுவது அவசியத்திலும் அவசியமானதாகும். கலிமா நிரப்பமானுல்தான் மற்றெல்லா வணக்கங்களும் நம்மில் பலிதமாகும். கலிமாவில் நிரப்பமாகுவதை ஆண் பெண் இரு தரத்தாரும் விளங்கிக் கொள்வது முக்கிய கடமையாகும்.

தக்கலை பீர் முஹம்மது அப்பா திருநெறி நீதத்தில் கலிமா விளக்கத்தில்

ஆகியக் கடுகில் அதில் சிரிதாகும்
அப்பிலும் அதிகமாம் கூர்மை
மாய்கையாம் மனதில் வேகமதாகும்
மயிரிலும் அதிகமாம் நேர்மை
தோகையாம் மண்ணிலும் பொருமையதாகும்
தோற்றிய விழியிலும் ஒளிவாம்
பாகிய பஞ்சாமிர்த மிலாஞ்சனை
பழிங்கியில் பார்க்கவும் தெளிவே!
தெளிவாங் கசகசா விதையிலு மடக்கம்
திருப்பாக் கடலிலு மிடமாம்
நெளிவா இதன் பொருள் நிறைந்திடு மனமே
நீதியின் திருவருளாலே
ஒளிவாஞ்சுடராம் ஒரு பொருள் தோன்றும்
ஒருகுறை அவர்க்கணுகாது

வழிபாடறிந்து வணங்கிடும் பேர்க்கு
வகுத்துரைப்பேன் வழி இன்னம்

இனி தொழுகைக்கு ஒழுச் செய்ய ஆரம்பிக்கவும்.

சிறுநீர் கழித்து இஸ்திஞ்சா வுக்கிருந்து கழுவிக் கொள்வதும், இரு கால்களைக் கழுவிக் கொள்வதும், இரு கைகளையும் மணிக்கட்டு வரை பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீமென்று ஓதி கழுவுவதும், வாய் கொப்பளித்து பல்லு நாக்குத் தீட்டிக் கொப்பளித்து, நாசி சுத்தஞ் செய்து, தொழுக வேண்டிய ஒளுச் செய்து கொள்வதாக நிய்யத்துச் செய்ய ஆரம்பித்து, இரண்டு கையால் தண்ணீரைக் கொண்டு முகத்தை மூன்று விடுத்தம் கழுவி, தலையில் நெற்றிக்கு மேலே நாலு அங்குல உயரம் மூன்று விடுத்தம் மஸ்ஹு செய்வதும், இரு கைகளால் இரு காதுகளில் மூன்று விடுத்தம் மஸ்ஹு செய்வதும், இரு கால்களையும் முன்புறமும் பின் புறமும் அழுக்கில்லாமல் கழுவிக் கொள்வதும், ஷஹாதத்துக் கலிமாவை ஓதிக் கொண்டே ஒழுச் செய்து கொள்வதும் முஸ்லிமாகிய ஆண் பெண் இருபாலார்கள் மீதும் முக்கியக் கடமையாகும்.

இனி தொழுகையை ஆரம்பிப்பது, மேற்குக் கிபுலாவுக்கு நேரே அதபாக வந்துநின்று, அதாவது இரு கால்களையும் கொஞ்சம் அகலமாக்கி நின்று அந்த வக்தைக் குறித்து சுன்னத்தைத் தொழுது, பின்னால் பர்லைத் தொழுக வேண்டியது. அதாவது நிலை—அலிபு ருக்கூஉ—ஹே, சுஜூது—மீம், இருப்பு—தால் அதன் விபரம் அலிபு மரங்களின் வணக்கம்; மரங்களிலுள்ளவை அடங்கலையும் நீ உபயோகிக்கின்றாயல்லவா? அவை தம்மைப் படைத்த நாயனை வணக்

கச் செய்து கொண்டிருந்ததை நீயும் பின்பற்றிக் கொள். அது நிலையில் நின்று வணங்கியதுபோல்; நிலை அலிபாகும்.

மிருகங்கள், ஆடு மாடு, ஒட்டகம், மான்மரை ஆகிய இவைகளில் உனக்கு ஹலாலாக்கப் பட்டவைகளை நீ புசிப்பாக்கிக் கொள். அவை ருக்கூஇல் குனிந்து கொண்டே தம்மைப் படைத்த இறைவனுக்கு வணக்கஞ் செய்கின்றன. அதுபோல் அதற்குப் பகரமாக ருக்கூஉ செய்துகொள், அந்த ருக்கூஉ ஹேயாகும்.

அதன் பின் சமிஅல்லாஹு லிமன்ஹமிதஹு என்று நிலைக்கு வந்து றப்பனா லக்கல் ஹம்து ஓதி, சுஜூதுக்குப் போகவும்; ஏழு உறுப்புகளும் சுஜூதிட வேண்டும்; இரு கால்விரல்கள் உட்புறம் மடக்கி சுஜூதிட வேண்டும்; நெற்றி நாசி நுனியும் இரண்டு முழங்காலும் நிலத்தில் படிந்திருக்க வேண்டும்.

இரண்டு கைகளும் இரு காதுக் கடுத்திருக்க வேண்டும். இதாகிறது பறவைகளின் வணக்கம்; மீமாகும்: அப் பறவைகளில் உனக்கு ஹலாலாக்கப் பட்டவைகளைப் புசித்துக் கொள். அவை சுஜூதில் தம்மைப் படைத்த நாயனை வணங்கச் செய்கின்றன; அதற்குப் பகரமாக சுஜூது செய்து கொள்; அதுதான் மீம்.

இப் பூமியில் மலைகள் இருப்பிலிருந்து வணங்குவது போல் நாமும் நம்மிறைவனுக்கஞ்சி இருப்பிலிருந்து அத்தஹிய்யாத்தோத வேண்டும்; அது தாலாகும்.

அலிபு நிலையும், ருக்கூஉ ஹேயும், சுஜூது, மீமும் இருப்பு தாலும்; ஆக வணக்கம் நாலு வகை. இந்த தொழுகையின்பேர் அஹ்மதுவாம், இதை செம்மையாய்த்

தொழுது வந்தவர் முஹம்மதுவாம். இத் தொழுகையில் ரகசியங்கள் பலவுண்டு. அஞ்சுக் கிரண்டு பழுதில்லை என்பார்கள், அதாவது கலிமா ஷஹாதத்தைத் திட்டப் படுத்தித் தெளிவு பெறுவதும், அதைத் தொழுகையில் நிரப்பி வைப்பதுமாம். நிரப்பி வைப்பதெவ்விதமானல் அத்தஹிய்யாத் தோதலில், அஷ்ஹது அன் லாஇலாஹ இல் லல்லாஹு வென்பதும், வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு வென்பதும், அல்லாஹும்ம சல்லி அலா முஹம்மதின் என்பதுமாம். இவற்றில் பெரிய ரகசியங்கள் பொதிந்துள்ளன.

அதாவது அத்தஹிய்யாத்தென்பது உயிரையும் இந்த உடலையும் பரக்கத்தாகிய கருணையாகிய சமுகத்திற்குக் காணிக்கையிடுகிறேன் என்பதாம். அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு என்பதும், அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் என்பதும் வெகு வலுப் பமுள்ளது இத் தொழுகை. ஆவதினல் கலிமாவைத் தெளிவுபடுத்துதலும், தொழுகையை நேமமாக்கிக்கொள் வதும் முக்கியக் கடமை. இதைக் கைவிடுவதற்கு எந்தக் காரணமும் சொல்ல இடமில்லை. மற்ற மூன்றுக்கும், அதா வது மூன்ருவது ஜக்காத்து, நான்காவது நோன்பு. ஐந்தா வது ஹஜ்ஜு இந்த மூன்றையும் தவிர்க்கச் சிலருக்குக் காரணமுண்டு.

கலிமா ஷஹாதத்தோதியே ஒளுச் செய்கின்ருேம். கலிமாவாகிறது ஒளுவில் நிரப்பமாகின்றது; இரண்டாவது தொழுகை. தொழுது முடியத் தொழுகை நிரப்பமாகின் றது.

நான்காவது நோன்பு தொழுது சலாங் கொடுக்கும் வரை உமிழ்நீரை முழுங்கினால் தொழுகை முறியும் அங்கே நோன்பு நிரப்பமாகின்றது

ஐந்தாவது ஹஜ்ஜு: இரண்டு தோள்புயங்களிலும் வலது புறம் அஹ்லுல் ஜலால்களுக்கும், இடது புறம் அஹ்லுல் ஜமால்களுக்கும் சலாங் கொடுப்பது. ஹஜ்ஜு நிரப்பமாகின்றது.

ஆனதினால் தொழுகையை விட்டிடும் துஷ்டர் தங்களுக்குச் செய்த துன்பமதுதனைக் கேள்; நாளை அழுகை நரகத்தில் மெழுகுபோலுருகுவார் அனியாயமென்ன சொல்வேன்! தொழுகையின் பேர் அஹ்மதுவாம்; அதை அதபுடன் அஞ்சி பயபக்தியாகத் தொழுது வந்தோர் முஹம்மதுவாம்.

நூன்முகம் முற்றும்

قال النبى صلى الله عليه وسلم بنى الاسلام على خمس

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்:- தீனுல் இஸ்லாமெனு மார்க்கமாகிறது. ஐந்து காரியங்கள் கொண்டெடுக்கப்பட்டது. அதில் ஒன்றாவது கலிமா; நாவினால் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்று சொல்லி இருதயத்தில் உறுதி கொள்வது ஆண் பெண் இருபாலார் பேரிலும் கடமையாகும்.

இரண்டாவது, தொழுகை சரீர உறுப்புகளை ஆட்டி அசைத்துக் குனிந்தும், வளைந்தும், நிமிர்ந்தும் பிரயாசை யுடன் கல்பில் உறுதி பூண்டு தொழுவது.

மூன்றாவது, ஜக்காத்து முதலிருந்தால் கணக்கெடுத்து வருஷந்தோறும் நூற்றுக்கு இரண்டரை விகிதம் முஸ்லிம் ஏழைகளுக்கீவது.

நான்காவது, நோன்பு பிராயம் எட்டியவர்கள் ஆண் பெண் தங்கடமில்லாதிருந்தால், இரு தரத்தார் பேரிலும் ஒரு மாதம் கடமையாகும்.

ஐந்தாவது, ஹஜ்ஜு; ஜக்காத்து நீக்கி முதல் அதிக மிருந்தால், மக்கா மதீனாவென்னும் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று ஹஜ்ஜும் உம்ராவும் செய்து தன்னைச் சுத்தப் படுத்திக் கொண்டு, அன்று பிறந்த பாலகனாக வேண்டியது.

இஸ்லாம்.

மேற்கண்ட ஐந்து காரியங்களைக் கொண்டும் தீனுல் இஸ்லாத்தை எடுக்கப்பட்டதென்றால், எதிலிருந்து எடுக்கப்பட்டது என்பதற்கு விபரமாவது:— இஸ்லாமென்ற பதம் ஐந்தெழுத்துக் கொண்டுள்ளது. ஒன்றாவது அலிபு, இரண்டாவது சீன், மூன்றாவது லாம், நான்காவது அலிபு ஐந்தாவது மீம். இந்த ஐந்து ஹர்புகளைக் கொண்டும் மேலே குறிப்பிட்ட ஐந்து காரியங்களும் எடுக்கப்பட்டது.

ஒன்றாவது அலிபு

அது எவ்விதம் எடுக்கப்பட்டதேயானால், அலிபுக்கு இலக்கம் அப்ஜத் கணக்கின்படி ஒன்று. அந்த ஒன்றைக் கொண்டுதான் ஹயாத்தில் ஒரு தடவை கலிமாச் சொல்வது பர்லாக்கப்பட்டது. இதுதான் ஷரீஅத்து என்று சொல்லப்படும்.

இரண்டாவது சீன்

அப்ஜத் கணக்கின்படி சீனுக்கு இலக்கம் அறுபது. இந்த அறுபதைக் கொண்டதுதான் இரவு பகல் அறுபது நாழிகையாகும். இந்த ஒவ்வொரு நாளும் ஐந்து வக்தும் பதினேழு ரக்அத்துத் தொழுகை தொழுது கொள்ளும்படி பர்லாக எடுக்கப்பட்டது; இது தான் தரீக்கத்து

மூன்றாவது லாம்

அப்ஜத் கணக்கின்படி லாமுக்கு இலக்கம் முப்பது. இந்த முப்பதையுங் கொண்டதுதான் றமலான் மாதம் முப்பது நாளும் முப்பது நோன்பு வைப்பது. அதில் இந்த முப்பது பகலையும் விட்டு விடாமல் முப்பது நோன்பு வைப்பதும், அந்த இரவுகளிலும் கண் விழித்து வணக்கத்தைக் கொண்டு பராக்காகி ஹயாத்தாக்கிக் கொண்டிருப்பதும். பர்லாக்கப்பட்டிருக்கின்றது; இது தான் ஹகீக்கத்து.

நான்காவது அலிபு

அப்ஜத் கணக்கின்படி அலிபுக்கு இலக்கம் ஒன்று. இந்த ஒன்றைக் கொண்டதுதான் ஹஜ்ஜு. அதற்கு முதலும் பலமுமிருந்தால், தன் ஹயாத்திலொரு தடவை மக்கா

மதீனாவென்னும் புண்ணிய பூமிகளைக் கண்ணால் பார்த்து, அதில் ஹஜ்ஜு செய்வது பர்லாக எடுக்கப்பட்டது; இது தான் மஃரிபா வென்று சொல்லப்படும்.

ஐந்தாவது மீம்

அப்ஜத் கணக்கின்படி மீமுக்கு இலக்கம் நாற்பது; இந்த நாற்பதையும் கொண்டதுதான் ஜக்காத்து. வருஷம் ஒரு தடவை நாற்பதுக்கு ஒன்று வீதம், நூற்றுக்கு இரண்டரை வீதம் ஜக்காத்துக் கொடுப்பது பர்லாக எடுக்கப்பட்டது; இதுதான் 'சூபியத்து' என்று சொல்லப்படும்.

இதில் ஷரீஅத்து, தரீக்கத்து, ஹகீக்கத்து, மஃரிபத்து சூபியத்து. என்று சொல்லிக் கொண்டு வந்ததன் விபரமாவது, ஷரீஅத்தென்றால் சொல்; சொல்லென்றால் நாவினால் கலிமாச் சொல்வது; இது வணக்கத்தைச் சேர்ந்ததல்ல; சொல்லை மட்டும் உண்மையாக்குவது. அதனுடைய அர்த்தம் அப்படி உண்மை அந்த நாவின் பேரில் நிலை நின்றால் தான் ஒருவன் உண்மையான கலிமாச் சொன்னவனாவான்.

தரீக்கத்து விளக்கம்.

தரீக்கத்து என்றால் செயல்; செயலென்றால், முன் சொன்ன கலிமாவுக்குரிய வணக்கம். அஃதாவது தொழுகை நாள் ஒன்றுக்கு ஐந்து வக்து பதினேழு ரக்அத்துத் தொழுகையை நின்றும், குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும், விழுந்தும், எழுந்தும், இருந்தும் இப்படியெல்லாம் செய்வது செயல் என்பது. இவ்விதச் செயல் உள்ளவர்கள்தாம் முன் சொன்ன கலிமாச் சொன்னவராவார்கள். அவ்விதச் செயலில்லாதவர்கள் கலிமாச் சொன்னவரல்ல என்பதுதான்.

ஹக்கீகத்து விளக்கம்

ஹக்கீகத்து என்றால் ஹால்; ஹாலென்றால் வழக்கம்; இந்த வழக்கத்தை நேமம், காலம், தொடர்பிடி, விடாமுயற்சி, மறவாச் செயல், ஓயா வணக்கம், ஒழியாச் செல்வம், அழியா ஹிம்மத்து, கழியாச் சுவாசம், விழியா முழிப்பு என்னும் தரிபாடாகிய சொல்லின்படி, எந்த நாளும் விடா முயற்சியுடன் வணங்குகிறவர்கள்தாம் முன் சொன்ன கலிமாச் சொன்னவராவார்: இல்லையானால் கலிமாச் சொன்னவராக மாட்டார்.

மஃரிபா விளக்கம்

மஃரிபா வென்றால் அறிவு. அறிவென்றால், கண்ணுடைய பார்வைக்கும் நாவினுடைய சொல்லுக்குமிடையில் இருந்து கொண்டு ஒவ்வொரு வஸ்துக்களையும் இன்ன வஸ்தென்று அறிந்து சொல்கிறதே அதுதான் அறிவு அந்த அறிவு இருந்து அரசு புரியும் சிம்மாசனமாவது இருதயம் ஓய்வு எடுக்கும் தலம் மூளை. அறிவு தூங்கினால், கழியாச் சுவாசம், அறிவு விழிக்கும் வரையும் தன்னுடைய காரியங்களைச் சரியாய் நடத்திக் கொண்டும் இருக்கின்றது.

இந்த அறிவினுடைய ஏவலர்களாகிய உறுப்பினங்கள் யாவும் அசைவற்று இருப்பது போல், எழுபத்திராயிரம் நாடிகளும், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நரப்புகளும், எத்தனையோ கோடி உரோமங்களாகிய பட்டாளத்துடனும் அரசன் தன்னுடைய உறங்கு மண்டலத்தில் உறங்குகிறான் என்பதுவே அறிவு. இந்த அறிவாகிய அரசனுக்கு உறுப்பினங்கள் அடிமையானதுபோல், நாம்

நம்முடைய நாயகனுக்கு அடிமையாக வேண்டுமென் பதை மறக்காமல், வணக்கத்தை எடுத்து நடந்தவன் தான் மேல் கூறிய கலிமாச் சொன்னவன்; இல்லையானால் அவன் கலிமாச் சொன்னவனாகமாட்டான்.

ஓர் உதாரணம்.

ஒரு பட்டணம்; அங்கு ஒரு சுல்த்தான் இருக்கின்றார். அவருக்குப் பட்டணங்கள் எண்ணற்றவைகள்; அவை களுக்கதிபர்கள் இலட்சத்திருபத்து நான்காயிரம்; இந்த இலட்சத்திருபத்து நான்காயிரம் பேருக்கும் தலைவர்கள் எழுபத்தீராயிரம்; இந்த எழுபத்தீராயிரம் பேர்களுக்கும் தலைவர்கள், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுப்பேர் கள்; இந்த நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுப் பேர் களுக்கும் தலைமையானவர்கள் முன்னூற்றுப் பதினைந்து பேர்கள்; இவர்களுக்குத் தலைவர்கள் இருநூற்றுப் பதி னன்கு பேர்கள்; இவர்களுக்குத் தலைவர்கள் தொண்ணூற் றிரண்டு பேர்கள்; இவர்களுக்குத் தலைவர்கள் பத்துப்பேர் கள்; இவர்களுக்குத் தலைவர்கள் ஏழுபேர்கள்; இவர்களுக் குத் தலைவர்கள் ஐந்து பேர்கள்; இவர்களுக்குத் தலைவர்கள் நான்குபேர்கள்; இவர்களுக்குத் தலைவர்கள் மூன்று பேர் கள்; இவர்களுக்குத் தலைவர்கள் இரண்டு பேர்; இவர் களுக்கெல்லாம் தலைவன் ஒருவன்.

இப்பேர்ப்பட்ட வலுவுடன் அரசுபுரியக் கூடிய சட்ட திட்டங்கள் அடங்கிய புத்தகங்கள் நான்கு, இந்த நான்கில் மூன்று புத்தகங்களிலும் உள்ள சட்ட திட்டங் கள் முடிவடைந்ததின் பிறகு, நான்காவது புத்தகம் ஆரம் பிப்பதற்காக மகா ஜனக் கூட்டமொன்று கூடி அதற்கு

ஆகுமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி, இப்போது நடந்து கொண்டு வருகிறது. அது எப்படியானால் இருள் நீங்க நீங்கப் பிரகாசம் அதிகமாகுவதுபோல் அரசாட்சி நடந்து வருகின்றது.

அவ்வித அரசாட்சி எந்தத் திசையில் நடக்கிறது? அந்த அரசனின் பெயரென்ன? குலமென்ன? எந்தக் கோத்திரம்? அவ்வரசனின் பாஷை என்னவென்றால், பட்டணமாவது மஃரிபாவென்னும் பட்டணம்; அதில் அரசு புரியும் அரசன் மலிக்குல் ஜப்பாராகிய அல்லாஹு ஜல்ல ஷானஹு வதஆலா; அவனுடைய எண்ணிக்கையற்ற பட்டாளம் என்பதின் கருத்து மலக்குகள்; அவர்களுக்குத் தலைவர்கள் இலட்சத்திருபத்து நான்காயிரம் நபிமார்கள்; அவர்களில் சிறந்தவர்கள் எழுபத்திராயிரம்பேர்; அவர்களில் சிறந்தவர்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுப் பேர்; அவர்களில் சிறந்தவர்கள் இரு நூற்றுப் பதினொன்கு பேர்; அவர்களில் சிறந்தவர்கள் தொண்ணூற்றிரண்டுபேர்; அவர்களில் சிறந்தவர்கள் பத்துப் பேர்; அவர்களில் சிறந்தவர்கள் ஏழுபேர்; அவர்களில் சிறந்தவர்கள் ஐந்துபேர்; அவர்களில் சிறந்தவர்கள் நான்கு பேர்; அவர்களில் சிறந்தவர்கள் மூன்று பேர்; அவர்களில் சிறந்தவர்கள் இரண்டுபேர்; அவர்களில் சிறந்தவர் ஒருவர்.

மூச்சுடர்.

ஒன்று என்பது அல்லாஹ்; இரண்டென்பது அல்லாஹ்வும் அவனுடைய ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும்; மூன்றென்பது அல்லாஹ்வும், அவனுடைய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், எங்கள் அபூ ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும்;

நான்கென்பது அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் எங்கள் அல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், எங்கள் அபூ ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களும், எங்கள் உம்மு ஹவ்வா அலைஹிஸ்ஸலாமவர்களும்; ஐந்தென்பது அல்லா ஹுவும் ரஸூல் (ஸல்) அவர்களும் எங்கள் அபூ ஆதம் (அலை) அவர்களும், உம்மு ஹவ்வா (அலை) அவர்களும், அவர் களில் வெளியான மக்களும்; ஆறு என்பது அல்லாஹ்வும் அவனுடைய ரஸூல் ஸல்லல்லாஹு (அலை) அவர்களும் எங்கள் அபூ ஆதம் (அலை) அவர்களும், உம்மு ஹவ்வா (அலை) அவர்களும், ஏழு சிபத்துகளும். அதாவது ஹயாத்து சீவன், இல்முன் அறிவு, இருதத்தன் நாட்டம், குத்ரத்து தத்துவம், சம்உன் கேள்வி, பசறுன் பார்வை கலாம் பேச்சு: இந்த ஏழு சிபத்துகளையும் பெற்றதுதான் (தாத்து); அதைப் பெற்றுக் கொள்வதுதான் சிபத்து சிபத்து என்பது ஏழு. ஏழு சிபத்துகளையும் வெளிப்படுத் தியவர்களில் சிறந்தவர்கள்தாம் தீர்க்கதரிசிகளில் பத்து நபி மார்கள். தொண்ணூற்றிரண்டென்பது இந்த சிபத்து என்னும் சீவன், அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு இந்த ஏழுக்கும் கருவு இந்த நபிமார்களில் யாராலல் (முஹம்மது). இந்தத் தொண்ணூற்றிரண்டை அப்ஜத் கணக்குப்படி பகிர்ந்தால், மீமுக்கு நாற்பது, ஹேய்க்கெட்டு, அடுத்த மீமுக்கு நாற்பது, தாலுக்கு நான்கு ஆக நான்கு எழுத்துக்களில் நின்றும் முஹம்மது என்ற நாமம் வெளியாகின்றது.

இரு நூற்றுப் பதினன்கென்பது (றூஹு). இந்த றூஹுடைய இஸ்முகளுக்கு இருநூற்றுப் பதினன்கை யும் பகிர்ந்தால், ரேய்க்கு இருநூறு வாவுக்காறு, ஹேய்க் கெட்டு; ஆக இந்த மூன்று எழுத்துக்களில் நின்றும்

றூஹு வெளியாகிறது. இந்த றூஹு ஐந்து வகையாகும்:-

றூஹின் விபரம்

ஒன்றாவது:- மண்ணுக்குள் வாழும் படைப்புக்களுடைய றூஹு; அவைகள் மண்ணை விட்டும் வெளியானால் அழிந்துவிடும்.

இரண்டாவது:- தண்ணீருக்குள் வாழும் படைப்புக்களுடைய றூஹு; அவைகள் தண்ணீரை விட்டும் வெளியானால் அழிந்துவிடும்.

மூன்றாவது:-மண்ணுக்கு வெளியில் உலாவும் மனிதன் ஆடுமாடு போன்ற படைப்புக்களின் றூஹு. இவைகள் மண்ணுக்குள் அல்லது தண்ணீருக்குள் வாழ முடியாது மடிந்துபோகும்.

நான்காவது:- அன்று உதயமாகி அல்லது இரண்டு, மூன்று, நாலு, ஐந்து, ஆறு, ஏழு இந்த நாட்களில் அழிந்து போகக் கூடிய படைப்புக்களுடைய றூஹு; இவைகளும் அழிந்து போகும்.

ஐந்தாவது:- மனிதன் ஆடு மாடு போன்ற உயிரினங்களுடைய குடல்களிலும் மற்றும் அவயவங்களிலுமுள்ள புழுக்கள்; இவைகளும் வெளியில் வந்தால் அழிந்துபோம். இந்த ஐந்து வகைகளும் கொண்டதுதான் றூஹு என்று சொல்வது.

முன்னூற்றுப் பதினைந்தென்பது. முஹம்மது என்னும் இஸ்மின் சத்தில் மறைந்த மீமையும் சேர்த்து அப்ஜதில் கபீர் என்னும் விரிவான முறையில் கூட்டினால், மீம் ஆறு, ஹேய் ஒன்று, அலிபு மூன்று, தால் ஒன்று, லாம் ஒன்று, ஏ மூன்று, அப்ஜதில் மீம் ஆறுக்கும் இருநூற்று நாற்பது, ஹேய் ஒன்றுக்கு எட்டு, அலிபு ஒன்றுக்கு ஒன்று, தால் ஒன்றுக்கு நான்கு, லாம் ஒன்றுக்கு முப்பது, ஏ மூன்றுக்கும் முப்பது இதே விதங் கூட்டினால், முந்நூற்றுப் பதினைந்து சரியாகும். ஆனால் சிலர் முந்நூற்றுப் பதின் மூன்று முர்சலீன்களென்றும் சொல்கிறார்கள். மேலே குறிப்பிட்டபடி பார்த்தால் முந்நூற்றுப் பதினைந்து முர்சலீன்களான நபிமார்களாவார்கள்.

நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு என்பது. இந்த நபிமார்களானாலும் அல்லது மற்றுமுண்டான படைப்புக்களானாலும் அவைகளின் பெரிய நரம்புகள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு.

எழுபத்தீராயிரம் என்பது. அவைகளின் சிறிய நரம்புகள் எழுபத்தீராயிரம். இலட்சத் திருபத்து நாலாயிரமென்பது. முன் குறிப்பிட்ட கணக்குகளிருக்க மடங்களாயிருக்கும். எண்ணிக்கை யற்றது என்பது அவைகளின் உரோமங்கள் எண்ணிக்கையற்றது.

இவ்விதமுள்ளதுதான் யஃசிபா என்ற பட்டணத்தின் அதிபர்கள். அந்தப் பட்டணத்தின் உதாரணமாகிறது மனிதர்களிலும் பார்க்கலாம்; மலக்குகளிலும் உண்டு; இதன்படி பார்த்தறிந்தவர்களுக்கு அறிவாளிகளென்று பெயர். அறிவாளிகளென்பது இவர்களுக்குத் தான் பொருத்தமாகும்.

வேதங்கள்

அந்தப் பட்டணத்தின் சட்ட திட்டப் புஸ்தகங்கள் என்பது வேதங்கள் நான்கு:- ஒன்ருவது தவ்ருத்து இரண்டாவது ஸபூர், மூன்ருவது இஞ்ஜீல், நான்காவது புர்கான். இந் நான்கு வேதங்களில் மூன்று வேதம் முடிவடைந்து விட்டன. இப்போது நடப்பது புர்கான் என்னும் திரு வேதமாகும்.

இந்த வேதம் ஒன்றுதான் இன்றைக்கு உலகத்தில் எண்பத்தைந்து கோடிப் பிரஜைகளாகச் சேர்ந்து படர்ந் திருக்கின்றது. எந்த வேதத்திலும் இவ்வளவு ஜனத் தொகை கிடையாது. ஆகவே இந்தச் சட்டத்தின் கட்டம் இப்போதுதான் உச்சநிலை பெற்று வருகிறது இந்த விதமாக அறிந்து கலிமா, தொழுகை, ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு இவைகளைச் செய்து வருகிறவர்களுக்குத்தான் சூபிய்யாக்களென்று சொல்கிறது.

இவைகளை உற்றுணர்ந்து பார்த்தால், மஃரிபாவென்பது அறிவிலும், அறிவு வணக்கத்திலும், வணக்கம் கலிமாவிலும் இருப்பதாகத் தெரிகின்றது. இக் காலத்தில் உள்ளவர்களில் சிலர் மஸ்துப் பொருள்களை அருந்திக்கொண்டு தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்களைச் செய்யாமல், தங்களை மஃரிபாக்காரனென்று தலைவிரித்து மஸ்து கொண்டலைகிறார்கள்.

இருவகை ஞானங்கள்

அஞ்ஞானமென்றும் மெஞ்ஞானமென்றும் இரண்டு வகைகள் உண்டு. நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திரு மக்கமா நகரில் அவதாரமாகு முன்னுள்ளதுதான் அஞ்ஞானம். அன்னார் மக்காவில் அவதாரமான பின்னுள்ளதுதான் மெஞ்ஞான மென்பது.

அஞ்ஞானத்தை நோட்டமிட்டால், மஸ்தப்பொருள் களை அருந்தி மஸ்துக் கொண்டு, தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்களில்லாமல், மஸ்துப் பிடித்துக் கெடு திகளையே செய்து கெட்டலையச் செய்யும். மெஞ்ஞா னத்தை நோக்கினால், அது முன் சொல்லி வந்த வணக்கங் களைச் செய்யாவிட்டால் நாம் மனிதனில்லை மிருகமேதான் என்ற பயபக்தியுடன் வணக்கத்தைப் புரிந்து உண்மையா ளர்கள் ஆக விளங்கச் செய்யும்.

கலிமாவின் பெருமை

ஹயாத்தில் ஒரு தடவை கலிமாச் சொல்வதாகிறது, நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸுலே கரீம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வுலகின் கண்

தோன்றி, தீனுல் இஸ்லாம் என்னும் பரிசுத்த சத்திய சன் மார்க்கத்தைத் தோற்றுவித்தவுடன், ஸஹாபாக்கள் இம் மார்க்கத்தில் சேரும்போது. அவர்கள் வயது சென்றவர்களாயிருந்தமையால், அவர்களின் சென்றுபோன வயதில் அவர்கள் காபிராக இருந்ததாகத்தானே ஆகுமென நினைத்து, நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடங் கேட்டார்கள்.

அக் கேள்விக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஒருவர் தன்னுடைய ஹயாத்தில் ஒரு தடவை இக் கலிமாவைக் கலப்பறுதலாகச் சொன்னால், பிறந்த அன்றிலிருந்து இஸ்லாமானவராகி விடுவாரென்று சொன்னவுடன், கூட்டங் கூட்டமாக வெகு மகிழ்ச்சியுடன் வந்து, கலிமாவைச் சொல்லி இஸ்லாமாகி ஸஹாபாக்களானார்கள்

அப்படிப் போலவே இன்றும், நாமும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவுகிறவர்களும் விளங்கிக் கொள்வதற்காக வேண்டியே, தன் ஹயாத்தில் ஒரு தடவை கலிமாச் சொல்வது பர்லென்று சொன்னார்கள் அதாவது கலிமாவை அறிந்துதான் சொல்ல வேண்டும். அதுபோல் எல்லா விஷயங்களையும் அறிந்துதான் சொல்ல வேண்டுமென்று ஹதீதில் வருகிறது. நாமும் எக் கருமமானாலும் தெரிந்தவன்தான் சொல்வான், செய்வான்; தெரியாதவன் செய்யவும் சொல்லவு மாட்டானென்று சொல்கிறோம். ஆனபடியால், கலிமாவை எவனொருவன் அறிந்து சொல்லவில்லையோ அவன் திட்டமாகப் பாவியாகவே இருக்கின்றான்.

ஆண்டவன் அவனுடைய கிருபை யென்னும் ரஹ்மத்தைக் கொண்டு, இக் கலிமாவை அறிந்த காமில்கள் கூட்டத்தில் என்னையும், என் முரீதீன்களாகிய உங்களையும் என்னையீன்ற அன்னை தந்தை, என் சந்ததிகள், என்னை உகந்தவர்கள் அனைவர்களையும் சேர்த்தருள்வானாக ஆமீன்! ஆமீன்!!

கலிமாவை அறிவது எப்படி?

இக் கலிமாவை அறிந்து கொள்வது எப்படியென்றால், பன்னிரண்டு பாகமாகச் சொல்லப் படுகின்றது. ஒன்றாவது, லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி. இதன் தாற்பரியமாவது, வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை, அல்லாஹு தஆலாவைத் தவிர; முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹு தஆலாவுடைய திருத்தூதராவர் என்றறிந்து உறுதிகொள்வது.

இரண்டாவது, இந்தக் கலிமாவை இருபங்குகளாகப் பிரித்தறிந்து உறுதி கொள்வது. அதாவது, (லாஇலாஹ) ஒருபங்கு; அதன் அர்த்தம், (விக்ரகம், சூரியன், சந்திரன், மாதா, பிதா, நீர், நெருப்பு ஆகியவை போன்ற) அல்லாஹ் அல்லாதவைகளுக்கு வணக்கங்கள் செய்யக் கூடாது; இல்லல்லாஹு—உண்மையான நாயனைத்தான் வணங்க வேண்டும்; அந்த நாயனை அறிந்து அவனுக்குத்தான் வணக்கம் உரியது என்று உறுதிகொள்வது.

மூன்றாது, (இந்த லாஇலாஹ இல்லல்லாஹு என்பதை) எழுத்துக்களாகப் பிரித்து, அந்த எழுத்துக்களை இணக்கமாகச் சேர்த்து அறிவது. எப்படியானால், அலிபு

ஐந்து. லாம் ஐந்து. ஹே இரண்டு ஆகப் பன்னிரண்டு எழுத்துக்கள். இவைகளை இணக்கமாகப் பார்த்தால், மூன்று வகைதான். இந்த மூன்று வகையும் வாசகத்திற் கிணங்க, அலிபு ஐந்து தலத்திலும் லாம் ஐந்து தலத்தி லும், ஹே இரண்டு தலத்திலும் புரண்டு (லாஇலாஹ இல்லல்லாஹு) என வெளியாகின்றது. இம் மூன் றெழுத்தைக் கொண்டேதான் அல்லாஹ் என்னும் இஸ் மும் வெளியாகின்றது. அதிலும் ஐந்தெழுத்துக்கள் இருக்கின்றன. அதை இனமாகப் பிரித்தால் அலிபு இரண் டும், லாம் இரண்டும், ஹே ஒன்றும் ஆக அல்லாஹ் என் னும் இஸ்மு வெளியாகின்றது. ஆகையால், இந்தவிதம் மூன்று இனத்திலும் அலிபு, லாம், ஹே இந்த மூன்று எழுத்துக்களும்தான் கலிமாவிலும் வந்துள்ளன. ஆனதி னுல், அல்லாஹ் என்பதுதான் லாஇலாஹ இல்லல்லாஹு என்பதாகப் புரண்டிருக்கிறது என்றறிந்து கொள்ளவும்.

இந்தக் கலிமாவினுல் ஜபர் நான்கு இருக்கின்றன; இந்த நான்கைக் கொண்டும் நான்கு வேதங்களிலும் இந் தக் கலிமாவைச் சொல்லப்படுகின்றது. ஸேர் இரண்டு உள்ளன; இந்த இரண்டைக் கொண்டும் அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் ஒன்று சேர்ந்துதான் இந்தக் கலி மாவை வெளியாக்கினுர்கள். பேஷ் ஒன்று உண்டு; இந்த ஒன்றைக் கொண்டு இந்தக் கலிமா ஒன்றுதான் உண்மை என்று உறுதி கொள்வதாகிவிட்டது. சுக்கூன் மூன்று இந்த மூன்றையும் கொண்டே முச்சுடர் என்று சொல் லும் அஹது, வஹது, வாஹிது என்னும் பொருள், தாய், தகப்பன், பிள்ளை என்பதுபோல் தோற்றுவிக்கப்பட்டது.

கலிமாவின் பிரிவு

இந்தக் கலிமாவை ஐந்து பாகமாக அதாவது லா-இலாஹ-இல்லா-அல்லா-ஹூ எனப் பிரித்து அறிய வேண்டும். ஒன்ருவது, லா-இது பஞ்ச பூதங்கள் என்னும் அனுசிருடைய புறத்தில் மண்; இந்த மண்ணுகிறது அல்லாஹூ தஆலாவுடைய குத்ரத்திஞல் தரிபாடாகி இருக்கிறது. இந்த மண்ணுகிறது துன்யாவாக எங்கும் படர்ந்திருக்கின்றது. ஆனுல் சில இடங்களில் தங்க மல் வெள்ளி மண் இவ்வித உலோகப் பொருள்களும் இரத்தினுதிகளும் உண்டாகின்றன. இதனுல் மண்ணுக்கொரு கெடுதியுமிராது இதன் மக்காம் நாசூத்து; தானம் பற்குத்தி குழாய் நாவு; நிறம் வெள்ளை: மலக்கு ஜிப்ராயீல் (யார்) அபூபக்கர். ஒரு தாயின் வயிற்றில் தரிக்கும் பிள்ளைகளில் மந்தமானவைகளையும் மதிப்புக் கடங்காத செல்வ சிகாமணிகளான பிள்ளைகளையும் பெற்றெடுக்கின்ருர்கள்; அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது.

இரண்டாவது (இலாஹ) அனுசிருக்குடைய புறத்தில் தண்ணீர் நிறம் சிவப்பு; இதுவும் சில இடங்களில் உப்புத் தண்ணீர், புளிப்புத் தண்ணீர், துவர்ப்புத் தண்ணீர் சவர்புத் தண்ணீர், நல்ல தண்ணீராக அந்தந்த இடத்துக்குத் தக்கவாறு பேதகம் ஏற்படுவது சகஜம். மேலே குறிப்பிட்ட மண் என்னும் அனுசிராகிறது, இனத்தில் பெண்ணென்றும், இந்தத் தண்ணீரென்னும் அனுசிர் ஆண்பாலாகவும் ஒப்பிடுவதற்குத் தக்கதாக மண்ணுக்குத் தண்ணீரில்லாவிட்டால் காய்ந்து புழுதியாவது போல் பெண்களும் அவ்விதமே ஆகின்ருர்கள். தண்ணீர் இறங்கினுல் மண் மகிழ்வடைந்து புற்பூண்டுகள் செழித்தோங்கி வள

மாகின்றது வர்ணிக்கவும் வேண்டுமா? நன்றாக யோசியுங்கள் மண்ணான பெண்ணுக்குத் தண்ணீராகிய ஆணின் தண்ணீர் விழுந்தவுடன் என்னென்ன வித விதமான பொருள்களெல்லாம் உண்டாகின்றன? நன்றாக ஊகிக்க வேண்டும். இந்த மண்ணான பெண்ணுக்கு ஆணான தண்ணீர் வந்து விழவும், மண்ணான பெண்ணின் மனமும் முகமும் எவ்வித அழகு ஜொலிக்கும்? மண்ணுக்குத் தண்ணீரில்லாவிட்டால் எதுவும் செய்ய இயலுமா? இயலாது. அதுதான் மலக் கூத்து; தானம் கல்பீரல்; நிறம் சிவப்பு; குழாய் நேத்திரம்; அதிபர் மீக்காயீல்; யார் உமர் (ரலி).

மூன்றாவது (இல்லா) இது அறுசிருடைய புறத்தில் காற்று; இதில் சில பேதகமுண்டு. அதாவது, இக்காற்று துர் நாற்றமான பொருளில் விழுந்து வந்தால் நாற்றமும், வாசமானவைகளில் விழுந்துவந்தால் வாசமாகவும், மரஞ்செடிகளில் விழுந்து வந்தால் குளிர்ச்சியாகவும், உஷ்ணமுள்ளவைகளில் விழுந்து வந்தால் காந்தலாகவும் இருக்கும்; இக்குணங்களை நாம் விளங்கிஇருக்கின்றோம். இதன் மக்காம் ஜபறூத்து; தானம் நுரையீரல்; குழாய் நாசி; நிறம் பச்சை; அதிபர் இஸ்றாபீல்; யார் உதுமான் (ரலி).

நான்காவது (அல்லாஹ்) அதாவது இது அறுசிரின் புறத்தில் நெருப்பு; இதிலும் சில பேதகமுண்டு. அதாவது, எண்ணெயில் எரிந்தால் ஒரு விதம்; எண்ணெய்ச் சத்துள்ள விறகுகளில் எரிந்தால் ஒருவிதம்; எண்ணெய்ச் சத்து இல்லாததில் எரிந்தால் ஒருவிதம். இவ்விதம் நாம் நடைமுறையில் காண்கின்றோம். இதன் மக்காம் (தானம்) (லாஹூத்து); தானம் பித்து; நிறம் கறுப்பு; குழாய் காது அதிபர் இஸ்றயீல் (யார்) அலி (ரலி).

ஐந்தாவது (ஹூ) இது ஆகாயம்; வானத்திற்கும் பூமிக்கும் நடுமத்தியில், ஹூ வென்று சொல்லும் ஓர் எழுத்து இருந்துகொண்டு, மண்ணுடைய உண்மையை யும் சக்தியையும் இழுத்து வானத்திற் கனுப்புகின்றது; தண்ணீருடைய உண்மையையும் சக்தியையும் இழுத்துச் சந்திரனுக் கனுப்புகின்றது; காற்றுடைய உண்மையை யும் சக்தியையும் இழுத்து நட்சத்திரங்களுக் கனுப்புகின் றது; நெருப்புடைய உண்மையையும் சக்தியையும் இழுத் துச் சூரியனுக் கனுப்புகின்றது. இந்த விதமாக மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய இந்த நான்கின் உண் மையையும் சக்தியையும் ஒன்று கூட்டி ஒரு வஸ்துவைப் படைக்க வேண்டுமென்றால், மேலே கூறப்பெற்ற நான் கின் உண்மையையும் சக்தியையும் ஒன்று கூட்டி, ஹக்கு சுப்ஹானஹூ வ தஆலாவின் உண்மையில் கலந்து ஊதி வீசப்படுகின்றது. எந்தப் பொருள்கள் ஹக்கு சுப்ஹான ஹூ வ தஆலாவின் நாட்டத்தில் வெளியாக வேண்டியவை களோ அவை வெளியாகிக் கொண்டே இருக்கின்ற தாக கலிமாவே எண்பித்துக் காட்டுகின்றது.

ஆறுவது கலிமாவை ஐந்து பாகமாகப் பிரித்துக் கூறியபடியால், அந்தக் கலிமா லாஇலாஹ இல்லல்லாஹு என்பதில், (ஹ) வென்றும் (ஹூ) வென்றும் சொல்லும் படியாகிய இரண்டெழுத்துக்களில், (ஹ) வென்ற எழுத்து மெய்யெழுத் தென்றும், (ஹூ) வென்ற எழுத்து உயி ரெழுத்தென்றும் சொல்வார்கள், இந்த மெய்யென்பது பெண்பாலாகவும், உயிரென்பது ஆண்பாலாகவும் உப யோகிக்க வேண்டும்.

கலிமாவை உணரும் விதம்.

7-வது உணரும்போது, அதிலுள்ள அகாரியங்களை உணர்ந்து, கல்குகள் அடங்கலிலும் பொருத்திப் பார்க்க வேண்டும். அதுபோல் இன்சானென்னும் நாம், நமதுசரீர உறுப்புக்களிலும் பொருத்திப் பார்க்க வேண்டும். ஆனால், உறுதியும் ஊக்கமும் வேண்டும். அதே விதம் கலிமா இன்சானில் இருப்பதை அறிந்தவர்கள்தாம் காமிலென்று சொல்லப்படுவார்கள்.

எட்டாவது, இன்சானில் கலிமாவாகிறது எப்படியா னால், (லா) மண்; (இலாஹ) தண்ணீர்; (இல்லா) காற்று; (அல்லா) நெருப்பு; (ஹு) ஆகாயம் இவைகளில் இன் சானை மூன்று கமலங்களாகப் பிரிக்க வேண்டும். அதா வது, முண்டகக் கமலம். இருதயக் கமலம், உந்திக்கம லம் இவ்விதமாக முக் கமலங்களிலும் கலிமாவைத்தரிசிக்க வேண்டும்.

கலிமாத் தரிசனை

அஃதாவது, லாஇலாஹ இல்லல்லாஹு என்பதில் ஐந்து பாகங்களையும் ஒன்று சேர்த்து முண்டகக் கமலமா கப் பார்த்தால் விளங்கும்.

முண்டகக் கமலமென்பது, சிரசு முதல் கழுத்து வரையிலும். அதில்(லா) மண்ணென்னும் மக்காம் (நாவு) இலாஹ தண்ணீரென்னும் மக்காம் (கண்); இல்லா காற்று என்னும் மக்காம் (மூக்கு); அல்லா நெருப்பு என்னும் மக்காம் (காது); ஹு ஆஹாயமென்னும் மக்காம் (மூளை) முன் கூறிவந்துள்ள மலக்குகள், யார்கள், திக்று ஆகிய வைகளை அந்தந்த மக்காம்களில் சேர்த்துக்கொள்ள வேண் டியது.

9-வது கலிமா லாஇலாஹ இல்லல்லாஹு" என்பதில் ஐந்து பாகங்களையும் ஒன்றுசேர்த்து இருதயக் கமலமாகப் பார்த்தால் விளங்கும் இருதயக் கமலமென்பது, கழுத்தி லிருந்து தொப்புள் வரையாகவிருக்கும். (லா) வென்பது மண் எனும் மக்காம், பற்குத்தியாகும்; (இலாஹ) தண்ணீ ரெனுமக்காம், கல்பீரலாகும்; (இல்லா) காற்று என்னும் மக்காம், நுரையீரலாகும்; (அல்லா) நெருப்பு என்னும் மக்காம், பித்தாகவிருக்கும்; (ஹு) ஆகாயம் என்னும் மக்காம், இருதயம். முன் கூறிய மலக்கையும், யாரையும் திக்ரையும் அந்தந்த மக்காம்களில் சேர்த்துக் கொள்ளவும்.

10-வது லாஇலாஹ இல்லல்லாஹு என்பதில், ஐந்து பாகமாக ஒன்று சேர்த்து, உந்திக் கமலமாகப் பார்த்தால் விளங்கும் உந்திக் கமலமென்பது, தொப்புளிலிருந்து முன் பின் துவாரம் வரைக்குமாகும் இந்த இடத்திலும் கலிமாவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, லா–மண், இலாஹ–தண்ணீர், இல்லா–காற்று, அல்லா–நெருப்பு, ஹு–ஆகாயம். இந்த ஐந்து விபரங்களும் தான் உந்திக் கமலத்தில் தரிபாடாயிருக்கின்றது. அது பெண்பாலார் மீது கர்ப்பக்குழி என்றும், ஆண்பாலார் மீது கல்பென்னும் (முதுவெலும்பு) விதையாகவும் இருக்கின்றது. இந்த இடத்தில் நல்ல ஆலோசிப்புகளுண்டு.

கலிமாவை இணைத்துப் பார்த்தல்

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல் லாஹி என்னும் இரு பாகங்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே, லாஇலாஹ இல்லல்லாஹு வென்னும் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்டும் எல்லா

உலகங்களும் நாமும் உண்டான விஷயங்கள். அஃதெவ் விதமெனில், வீடு கட்டி முடிந்தது: அந்த வீட்டில் குடியிருக்கும் உயிருள்ளவர்கள் யாரென்பதைக் காணவில்லை என்பது போலாம்.

இந்த முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்பதிலுள்ள எழுத்துக்கள் பன்னிரண்டு. அந்தப் பன்னிரண்டெழுத்துக்களையும் இனவாரியாகப் பிரித்தால் ஒன்பது எழுத்துக்களாகும். அதில் அலிப்-லாம்-ஹே இந்த மூன்று எழுத்துக்களும் முந்திய விளக்கத்தில் சேர்ந்ததால், அந்த மூன்று எழுத்தில் நின்றும்தான் அந்த முஹம்மதுர் றஸூலுல்லாஹி உண்டானதை விளங்கிக் கொண்டோம். ஆனதால் மற்ற ஆறு எழுத்துக்களுடைய விபரந்தான் நமக்குத் தெளிவாக வேண்டும்.

ஒன்ருவது மீம்-இந்த மீமைக் கொண்டும், முஹம்மதுர் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், முன்விபரிக்கப்பட்ட லாஇலாஹ இல்லல்லாஹு என்பதிலுள்ள அலிபு-லாம்-ஹே என்று சொல்லும் அல்லாஹு தஆலாவுடைய திருத் தூதராக இருக்கிருர்கள் என்பது நிச்சயமாகின்றது.

இரண்டாவது, ஹே இந்த ஹேக்கும் ஹையுன் ஹயாத்து, இந்த ஹயாத்துள்ளவைகள் யாவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டே தான் உண்டானவை.

மூன்ருவது, இதைக் குறித்து தலீல் கூறுகின்றது: நான்கு வேதங்களிலும் சொல்லி வருகிறது அது உண்மை தான்—அப்ஜதின்படி நான்காகும்,

நான்காவது. றே இந்த றேயாகிறது, றாஹு-என்றும் றாஹுல் அமீனென்றும் சொல்வதால் அந்த றேயாகிறது றஹ்மானுடைய இஸ்மில் நின்றும் கிடைத்ததென்றும் சொல்லப்படும்.

ஸீன்—ஸீன் கொண்டும் சகல படைப்புகளும் அந்த றஸூலைக் கொண்டும் உண்டானது; அந்த ஸீனை அப்ஜத்தில் அறுபதாகக் கணிக்கப்படும். இந்த அறுபதைக் கொண்டே இந்தஉலகம் யாவும் அந்த ஸீனுக்குள் அடங்கி இருக்கின்றமையால், அதன் விஷயங்களை இஸ்லாமென்னும் ஐந்தெழுத்தில், முழுதும் அலிபதில் எடுத்துக் காட்டும்; பிரிந்து போகாமல் அலிபில் நோக்கினுல் பேரின்ப நல்லருள் முன்னில் வரும்; சிறந்த முறையதை அறிந்துணர்ந்தால் சிந்தையில் கலிமாவையுவந்து கொள்வீர்கள்.

ஆறுவது, வாவு-இந்த வாவு கொண்டும் அப்ஜத் கணக்கில் பார்த்தால் வாவுக்கு இலக்கம் ஆறு. அந்த ஆறைக் கொண்டே ஈமானுடைய ஆறு காரியங்களும் எடுக்கப்பட்டது. அஃதாவது, ஈமானென்பது ஐந்தெழுத்து; இரண்டலிபும் யே, மீமும் நூனும்; கோமான் அலிபென்றறிவதற்கே இன்சான் வெளியாகி, பூமான் முஹம்மது மீமுமாகி புகழ்ந்து அல்லாஹ்வைக் கண்டதனுல், சீமான் ஒளிவது பரந்து வீசி ஜகத்தில் நூன் நூரென்றறியலானேம், அறிந்த நூரதை முன்னிலாக்கி ஆமன்து பில்லாஹி யென்று ஓதி பிரிந்து போகாமல் மலக்கு அங்கு பேசியது வேதம் நபிகளுக்காச்சு—இறந்தபின் கியாமநாளில் எழுப்பி நன்மை தீமை கேட்டு திறந்த சுவர்க்கம் நரகமென்றறிந்து கொள்வீர். அந்த வாவை ஆறு ஆதாரமென்றும் வஹதானிய்யத்துடைய நிலை என்றுஞ் சொல்லுவார்கள்.

12-பன்னிரண்டாவது கலிமா லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி ஹ, ஹு, ஹி விளக்கம் இந்த இரண்டு பாகங்களிலும் மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன. அதாவது, ஹாவென்றும் ஹூ வென்றும் ஹீ யென்றும் இந்த மூன்று எழுத்துக்களிலும் ஹா உருவெழுத்தும், ஹூ உயிரெழுத்தும், ஹீ கருவெழுத்துமாகும். உருவென்பது பெண்பாலாகும். அதாவது கர்ப்பக் குழியில் கொண்டு போய் வைத்து நுத்துபாவை உருச் செய்ததும், அவ்வுரு நிரப்பமாகிப் பிறந்து, பாலென்னும் அமிர்தமீந்து உருவாக்கியதும், மாதாவென்னும் உருவுடைய ஹா வென்னுமெழுத்தென்று சொல்லப்படும்.

2-வது எழுத்து ஹூ; இந்த ஹூவாகிறது உயிரெழுத்து; அந்த உருவெடுக்கும் ஜடலத்திற்கு உயிரென்னும் றூஹு—அதாவது சூடு, இரத்தம், மூச்சு இம் மூன்றும் ஒன்று கூடியது றூஹு, றூஹி எனச் சொல்வது. அது ஹக்கு வ தஆலாவுக்குரியது. அந்த றூஹு போய் விட்டால் இந்த உருக்குலைந்து அழிந்துபோகும். ஆகையால் அந்த உருவுக்கும் றூஹுக்கும் சொந்தமில்லை; ஆணுமல்ல பெண்ணுமல்ல; அல்லாஹு தஆலாவுக்குச் சொந்தமானது றூஹு என்று சொல்லப்படுகின்றது.

3-வது எழுத்து, ஹீ-இந்த எழுத்துக்குக் கருவெழுத்து என்று பெயர். அந்த உருவெழுத்துக்குக் கருவாக இருக்கிறது; இது ஆண்பாலாக விருக்கும். எவ்விதமானல், ஆண்பிள்ளையுடைய நுத்துபாவை கர்ப்பக் குழியில் விட்டால் உருவாக்கியது உயிர் எழுத்தென்பதில் சந்தேகமில்லை. இவ்விதமாகவே கலிமாவை அறிந்து கொள்வது ஒவ்வோர் ஆண் பெண் இருதரத்தார் மீதும் பர்லாகும்.

'ஹூம்' என்பதின் விளக்கம்

ஆனால் இந்த லாஇலாஹ இல்லல்லாஹு என்பதின் கடைசியான ஹூவையும், முஹம்மதுர் றசூலுல்லாஹி என்பதின் முதலாவது மீமையும் இந்த இரண்டு எழுத்தையும் கூட்டினால், ஹூம் மென்று இந்த உலக முழுவதும் அந்தத் தத்துவங்கொண்டுதான் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றது. எவ்விதமேயானால், ஹூவாகிறது அல்லாஹு தஆலாவின் இஷாருவாகவும், மீமாகிறது முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்பதின் முதலிலுள்ள மீமுடைய இஷாருவாகவும், ஹூம் என்னும் தத்துவத்தில் சர்வாதிகளும் நடைபெற்று வருகின்றன. அந்த ஹூம் மென்பதை திக்ராகத் தம்மிலிருப்பது ஹக்கு வ தஆலாவின் குத்ரத்தாகும் தத்துவம்.

ஈமானில் ஐந்தெழுத்து.

ஈமானென்பது ஐந்து ஹருபுகளில் அமைக்கப்பெற்றிருக்கின்றது. அலீப், யே, அலீப், மீம், அலீப், நூன்; இவ்வைந்து ஹருபுகளிலும்தான் ஈமான் நிலைத்திருக்கின்றது. ஒன்ருவது அலிப்; இந்த அலிபிலிருந்து பில்லாஹி, அல்லாஹுதஆலா ஒருவன்; அவன் எப்பேர்க்கொத்தவனுல்,தனித்தவன் இணைதுணை, மாதா பிதா, மனைவிமக்கள், தம்பி இருபுத்தரிப்பு, ஊண் உறக்கம், மரதி, இறப்புப் பிறப்பு ஏதும் இல்லாதவன் ஒப்பிட முடியாதவன். அவன் யாரையும் பெற்றவனுமல்ல, யாரும் அவனைப் பெறவுமில்லை; ஆகுக என்ருல் யாவும் ஆகும்; அழிக யென்ருல் யாவும்அழிந்து விடும்; அவனல்லாத வேறு யாதொன்றுமிராது.ஒரு அணுவும் அவனன்றி யசையாது; ஆலம் அடங்கலும் அவனுக்குடையதுதான்; பூர்வீகமானவன் கதீமான

வன்; அவனை இன்ன விதமெ௳ன எதனேடும் ஒப்பிட முடியாது; அவன் தன்னில் தானனவனுகிய, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவாக இருக்கின்ருன் என்று ஒப்புக் சொள்கிறதும் உறுதிகொள்வதும்.

மலக்கு.

இரண்டாவது, வமலாயிக்கத்திஹி; அல்லாஹு சுப்ஹானஹு வதஆலாவின் ஏவலாளிகளாகிய மலக்குகளுண்டென்றும், அவர்கள் ஊண், உறக்கம், போகம், மலவாதை, ஜலவாதை மற்றும் அசூசியானவையற்றவர்கள்; அல்லாஹ்வின் ஏவலைக் கவனித்தவர்களாகவும் வணக்கஞ் செய்து கொண்டே ஏவலை எதிர்பார்த்தவர்களாகவும் இருப்பவர்கள். இன்னும் அவர்களில் பூமிக்கதிகாரரும், காற்றுக் கதிகாரரும், நெருப்புக் கதிகாரரும் இவ்விதம் பல வகைகளிலும் எண்ணிக்கைக் கடங்காத மலாயிக்கத்துகளுண்டென்று உறுதி கொள்ளுதல்.

வேதங்கள்.

மூன்ருவது, வகுத்துபிஹி இன்னும் அல்லாஹு சுபுஹானஹு வதஆலா இறக்கிய வேதங்கள் அதாவது, தவ்ருத்து, சபூர், இஞ்ஜீல், புர்க்கான் இந் நான்கு வேதங்களும் அவன் இறக்குவித்த சுஹுபுகளும் உண்டென்று உண்மை கொள்வது; அவைகளில் தவ்ருத்து, சபூர், இஞ்ஜீல் என்னும் இம் மூன்று வேதங்களும் மாறுபட்டு மறைந்து, அதற்கு நேர் மாற்றமாகவே இப்பொழுது காணப்படுகின்றன; அவர்கள் எஹுதியாகவும் நசாருவாகவும் மாறிவிட்டார்கள் என்றும் உறுதி கொள்ளுதல்.

ரசூல்மார்கள்.

நான்காவது, வருஸுலிஹி அவ் வேதங்களுடன் ரசூல்மார்களை அனுப்பி வைத்தான்: அதாவது தவ்ருத்து வேதத்துடன் நபி மூஸாவும், ஸபூருடன் நபி தாவூதும், இஞ்ஜீலுடன் நபி ஈசாவும் வந்தார்கள். இவர்களுக்குப் பின் இவ் வேதம் மூன்றும் மறைக்கப்பட்டு, அந்த கவ்மு கள் மாற்றமாகி விட்டார்கள்; புர்க்கான் வேதத்துடன், நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அதை அவர்களு டைய உம்மத்துகளுக்கு போதித்தார்கள்: அவர்களதை முழுவதையும் ஒப்புக் கொண்டார்கள். ஆனதினால் அவ்வேதம் கியாம நாள் வரையிலும் மாற்றப்படாமல் தரிபாடாக்கப்பட்டது. இன்னும் அந்த வேத பாஷையை கியாம நாளில் ஆண்டவன் முதல் அமரர்கள் வரை பேசுவார்கள்; நாமும் அப் பாஷையையே பேசுவோம்.

எழுத்து யே; இந்த யேயில் நின்றும், வருஸுலிஹி என்றும் இன்சான் என்றும் சொல்லப்படும். இந்த இன் சான் இனத்தில்தான் நபிமார்கள் உண்டானார்கள். இவர் களின் தொகை முன்னே சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்களில் முந்தியவர்கள் எங்கள் அபூ ஆதம் அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம்; பிந்தியவர்கள் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள். இவர்களுக்குப்பிறகு நபிமார்கள் கிடையாது. முன்னுள்ள நபிமார்கள் சில ருக்கு சுஹ்றுகள் உண்டு.

3—வது எழுத்து மீம்; இந்த மீமைக் கொண்டு முன் கூறிய நபிமார்களைப் பார்க்கவும் முத்திராங்கமும் மேன் மையும் வலுப்பமும் பெற்றவர்கள் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். 4—நான்காவது,

எழுத்து அலிபு; இந்த அலிபைக் கொண்டு அல்லாஹுதஆலாவின் உண்மைத் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதில் சந்தேகமில்லை.

5—ஐந்தாவது எழுத்து நூன்; இந்த நூனைக் கொண்டு வல்யவ்மில் ஆகிரி என்றும் நூறு என்றும் சொல்லப்படும். அந்த நூறைக் கொண்டும் கியாம நாளில் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆண்டவனிடம் கல்குகளை அதாவது, அவர்களின் உம்மத்தீன்களுக்கு ஷபாஅத்துச் செய்து மன்றாடி சுவர்க்கம் சேர்ப்பார்கள். அப்போது கேள்வி கணக்குக் கேட்டு நன்மையானாலும், தின்மையானாலும் ஒரு அணுவளவாவது விடுபடாமல், அவரவர் செய்த நன்மைக்குக் கூலி சொர்க்கமும் தீமைக்குக் கூலி நரகமும் கொடுக்கப்படுமென்றெப்புக் கொள்கின்றது.

முழுக்கின் விபரம்

இந்த முழுக்கை மூன்று தலங்களில் வைத்துப்பார்க்க வேண்டும்.

1—ஒன்றாவது 'பாலிகு' என்னும் பிராயம் எய்தியவுடன், நுத்துபாவென்னும் இந்திரியம் இஷ்க்கென்னும் ஆசைகொண்டு வெளிப்படுமாகில், உடனே ஒழுச்செய்து குளிக்க வேண்டும். அப்படிக் குளிக்காவிட்டால் விதியான முழுக்கு ஒரு போதும் நிவர்த்தியாக மாட்டாது. அப்படி அம் முழுக்கை நிவர்த்திக்காது மிதமாயிருந்துவிட்டால் அத்துடக்கு நம்மை விட்டு ஒரு போதும் நீங்கவே நீங்காது. இன்னும் அதிகமான காலந் தாமதமானால் நாம் தண்டனைக்காளாகுவோம்.

இதற்காக வேண்டி முன்னோர்கள், முழுக்குவிதிக்கு முன் முழுக்கிருக்க வேண்டுமென்று கூறியுள்ளார்கள். முழுக்கு விதியாகு முன் முழுக்கின் பர்லு ஷர்த்துகளை விளங்கிக் கொள்ள வேண்டியது ஆண் பெண் இருவர் பேரிலும் கடமையாக்கப் பட்டிருக்கின்றது.

இருவகை முழுக்கு

ஒரு ஆணும் பெண்ணும் விவாகமாகு முன்பே முழுக்குடைய பர்லு ஷர்த்துகளை நன்கு தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொள்ளாதிருந்தால் பாவியாவார்கள். கபுருக்குள் போனாலும் முன்கர் நக்கீரென்னும் மலக்குகள் வந்து திட்டித் திட்டி நெருப்புத் தடி கொண்டடித்து அடித்து வதைப்பார்கள்.

3-மூன்றாவது ஸக்கராத்துடைய வேளையில் ஏற்படக் கூடிய முழுக்காவது மவ்த்துடைய வேளையின் முழுக்கு. அந் நேரத்தை நிரம்பவும் எச்சரிக்கையாகக் கடத்த வேண்டுமென்று நினைப்பூட்டுகிறது. இதைப் பயந்துதான் ஆரிபீன்கள் காடுகளிலும் மலையடிவாரங்களிலும் சென்று தவஞ்செய்து தங்களின் பதவிகளை உயர்த்திக் கொள்கிறார்கள்.

அதுபோல் நாமும் பயந்து நடுங்கி, நம்முடைய ஸக்கராத்தில் அந்த முழுக்கின் கொடுமைகளில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டால் தான் ஜெயம் பெற்றவர்களாவோம். அதற்காக உள்ள உபாயத்தை அதாவது 'யா' வென்றும் ஹூ வென்றும் வாய் விட்டோதாமல், ஏற்றி இறக்கம் செய்வதும், இல்லென்றிருத்தி ஹக்கென்றடித்த் இல் இல் இல் இல் இல்லென்றே முழக்கஞ் செய்யத் தெரி

தவர்களிடந் தேடிப் போய்க் கண்டுபிடித்து, அவர்களின் மனதில் அன்பு பெருகச் செய்வையேயானால், அங்கிருந்து கனிந்தொழுகும்; அதுதான் சிறந்த பாக்கியம்; உனக்கு நசீபு வேண்டும்.

நப்சை அறிவது

நப்சு என்பது தன்னைப்பற்றி சொல்கிறது. இன்னும் குர்ஆனில் வருகிறது:— அம்மாரு வென்றும், லவ்வாமா வென்றும், முல்ஹிமா வென்றும், முத்மஇன்னு வென்றும் ருளியா வென்றும், மர்ளிய்யா வென்றும், காமிலா வென்றும் ஏழு நப்சுகள் இருக்கின்றன.

1—வது அம்மாரா, இதன் குணங்கள் நான்கு. ஒன்றுவது ஊண் குடிப்புக்களை மிதமின்சி அருந்துவதும் குடிப்பதும்.

2-இரண்டாவது தூக்கம் அளவு கடந்து தூங்குவது. 3-மூன்றுவது வார்த்தைகளை அனுவசியமான விஷயங்களில் அதிகமாக்குகிறது. 4-நான்காவது ஆணும் பெண்ணும் காலம் நேரம் அறியாமல் கூடுகிறது.

மனிதரில் மிருகம்

இந் நான்கு குணங்களைக் கொண்டு ஒழுங்கீனமாய் நடப்பவர்களை மிருக ஜாதிகளென்று சொல்லப்படும். இந் நான்கு குணங்களையும் ஒழுங்காக நடத்துவதற்கு, அரை வயிறு உணவும், கால் வயிறு தண்ணீர் அருந்துவதும்,

நாள் ஒன்றுக்கு ஐந்து மணி நேரம் தூங்குவதும், ஒழுங்கான வார்த்தைகளாகப் பேசுவதும் காலம் அறிந்து புருடன் பெண்சாதி கூடுவதும் உபாயங்களாகும். இவ்வித ஒழுக்கமுடன் நடப்பவர்களுக்கு நப்சு அம்மாரு வழிப்படும். 2-இரண்டாவது நப்சு லவ்வாமா; இதன் குணமாகிறது, நானென்னும் ஆண்மையாகிய அகங்காரமும், மேலே சொல்லிய அம்மாருவின் குணங்கள் நான்கும் ஆகும். இந்த ஐந்து குணங்களைக் கொண்டு ஒருவன் நடந்தானுகில் அவனை இப்லீசென்று சொல்லப்படும். இவைகளை ஒழுங்காக நடத்துவதற்கு, மேலே சொல்லிய முறைபோல் நடத்துவதோடு தாழ்மையையே உள்ளத்தில் எவ்வேளையும் கொண்டு வந்தால் நப்சு லவ்வாமா இவனுக்கு வசப்பட்டு விடும். இதனுல் தான் முன்னோர்கள் தாழ்ந்த இடத்திலே தான் தண்ணீர் கட்டி நிற்குமென்பார்கள்.

3-வது முல்ஹிமா; இதன் குணங்கள் இரண்டு, அதாவது இருதயத்திலொன்று நாவிலொன்று, உள்ளொன்று புறமொன்று என்று பலவிதமாகச் சொல்லப்படும். முன் சொல்லிய ஐந்து குணங்களோடு இந்த இரண்டு குணங்களையும்சேர்த்தால் ஏழு குணமாகும். இந்த ஏழு குணங்களைக் கொண்டு நடப்பவர்களை நரவாசிகளென்றும் ஹஸதுக்காரர்களென்றும் சொல்லப்படும். ஹஸதுக்கு இலக்கம், ஹேக்கு எட்டும், சீனுக்கறுபதும், தாலுக்கு நான்கும் ஆக எழுபத்திரண்டு கூட்டத்தாரெனச் சொல்லப்படும். இவ்விதக் கெடுதிகளைப் போக்கி ஒழுங்கான முறையில் நடப்பதோடு, உயிரிழந்தாலும் உண்மையே சொல்ல வேண்டுமென்று, பொய்ம் மொழிக் கிணங்காமல் உண்மையையே எல்லா விஷயங்களிலும் கொண்டு வருபவர்களாக நடந்துகொண்டு வருபவர்களுக்கு முல்ஹிமா வழிப்படும்.

4—வது முத்மஇன்னு; இதன் குணமாகிறது உண்மை அதாவது நிறைபோடும்படியாகிய தராசு நாக்குப்போல்; அந்த நாக்காகிறது கடைக்காரனுக்கும் கடையிலுள்ள சாமான்களை வாங்குகிறவர்களுக்கும் வஞ்சகமில்லாமல் சரிசமமாய்க் காண்பிக்கிறது. அதுபோல் ஆண்டவனுக்கும் அடியானுக்கு மிடையில் ஒரு சாட்சியாளனுக இருக்கும். கியாம நாளில் முத்மஇன்னுவாகிறது தன் செயல்கள் ஒன்றும் தவருமல் உள்ளாலுள்ளபடி தெளிவாய் அறிந்து சாட்சி சொல்லு மென்ற உண்மை குடிகொண்டிடுமானுல், தனக்கு முத்மஇன்னு வென்னும் நப்சு வழிப்படும். அதன் பிறகுதான் உண்மையாளரென்று நம்மை அழைப்பதற்குப் பொருத்தமானவராவோம்.

5—ஐந்தாவது ருளியா; இதன் குணமாவது, சென்ற காலத்தில், தான் செய்து வந்தவைகளை ஆலோசனை செய்தால், உடனுக்குடன் ஒவ்வொரு விஷயங்களையும் வெளிப்படுத்தும்; அவைகள் பாவத்தின் பேரில் நடக்கின்றனவா என்று அறிந்து அவைகளை வெளிப்படுத்தும்.

6-ஆருவது மர்ளியா; இதன் குணமாவது, வருங்காலத்திற்கான யோசனைகளைத் தயாரிக்கும்: அப்படித் தயாரிக்கும் போது மேலே குறிப்பிட்ட ருளியா என்னும் நப்சைக் கொண்டு நல்லது கெட்டதை அறிந்து. அந்தந்தத் திட்டப்படி செய்து கொள்வது.

7—ஏழாவது காமிலா; இதன் குணமாவது, நல்ல அமலிலும் நற்செயல்களிலும் நடாத்தி வைக்கும். அதன்படி நற்செயல் தன்னிடத்தில் தரிபாடாகி விட்டால், நல்ல வணக்கம் தரிபாடாகி 'காமில்' என்னும் பதவியை எய்திக்

கொள்ளும். இவ்விதம் இந்த ஏழு நப்சுகளுடைய விஷயங்களையும் குணங்களையும் அறிவதுதான் நப்சை அறிய வேண்டுமென்று சொன்னதின் அர்த்தம். இதற்கு தலீல்,

وَأَمَّا مَنْ خَافَ مَقَامَ رَبِّهِ وَنَهَى النَّفْسَ عَنِ الْهَوَى
فَإِنَّ الْجَنَّةَ هِيَ الْمَأْوَى

என்னும் ஆயத்தில் அல்லாஹ் அறிவிக்கின்றான். நப்சை அல்லாஹ்வின் உள்ளச்சங் கொள்வதில் எவ்வேளையும்தரிபாடாக்குவித்துக் கொள்வது முக்கியமாகும் என்று.

அறிவின் விபரம்

அறிவென்பது ஐந்துதான்; இவ்வைந்தும் எல்லாப் படைப்புகளுக்கும் உண்டு. இன்சானுக்கு மட்டும் பகுத்தறிவு என்று சொல்லக் கூடிய ஓர் அறிவு கூடுதலாக உண்டு. இதையுஞ் சேர்த்து ஆறறிவு என்று சொல்வார்கள்.

அவைகளின் விபரமாவது:- தொட்டறிவு, சுவைத்தறிவு, முகர்ந்தறிவு, பார்த்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு என்று சொல்லப்படும்.

1-வது தொட்டறிவு

இந்தத் தொட்டறிவைக்கொண்டு வன்மை மென்மை என்னும் இரண்டு விஷயங்களையும் தெரிந்து சொல்லக் கூடிய சக்தியை நமதாண்டவன் நம்மில் அமைத்தான்.

இந்த நன்றிக்காக நாம் அவனை சுபுஹு என்னும் இரண்டு ரக்அத்துத் தொழுகையையும் தொழுதுவிட்டால், அந்த அறிவை நம் கைகளில் வைத்த ஆதி ரஹ்மானுக்கு நன்றி செலுத்திலவர்களாவோம் என்பதற்காக வேண்டியே நமக்கு சுபுகுத் தொழுகை பர்லாக்கப்பட்டது.

2-வது சுவைத்தறிவு

சுவைத்தறிவைக் கொண்டு கசப்பு, தித்திப்பு உறைப்பு, உப்பு இந்நான்கு ருசிகளையும் அறிந்து சொல்லக் கூடிய சக்தியை நமதாண்டவன் நமக்கமைத்தான். இந்த நன்றிக்காக நாமவனை லுஹறு' என்னும் நான்கு ரக்அத்துத் தொழுகையையும் தொழுதுவிட்டால் அந்த அறிவை நம் நாவில் அமைத்த ஆதி ரஹ்மானுக்கு நன்றி செலுத்தினவர்களாவோம் என்பதற்காக வேண்டியே நமக்கு லுஹறுத் தொழுகை பர்லாக்கப்பட்டது.

3-வது முகர்ந்தறிவு

முகர்ந்தறிவைக் கொண்டு, முன் பின், வலம் இடம், இந்நான்கு திசைகளிலுமுள்ள வாசங்களையும், நாற்றங்களையும் அறிந்து கொள்ளக் கூடிய சக்தியை நமதாண்டவன் நமக்கமைத்தான் இந்த நன்றிக்காக நாமவனை 'அஸறு' என்னும் நான்கு ரக்அத்துத் தொழுகையையும் தொழுது விட்டால், அந்த அறிவை நம் மூக்கிலமைத்த ஆதி ரஹ்மானுக்கு நன்றி செலுத்தினவர்களாவோம் என்பதற்காக வேண்டியே நமக்கு அது பர்லாக்கப்பட்டது.

4-வது பார்த்தறிவு

பார்த்தறிவைக் கொண்டு முன், வலம், இடம் இம்மூன்று திசைகளிலும் உள்ள விஷயங்களை நாம் அறிந்து

கொள்ளக் கூடிய சக்தியை நமதாண்டவன் நம்மில் அமைத்தான். அந்த நன்றிக்காக நாம் அவனை 'மஃரிபு, என்னும் மூன்று ரக்அத்துத் தொழுகையையும் தொழுது விட்டால், அந்த அறிவை நம் கண்ணில் அமைத்த ஆதி ரஹ்மானுக்கு நன்றி செலுத்தினவர்களாவோம் என்பதற் காக வேண்டியே அது பர்லாக்கப்பட்டது.

5-வது கேட்டறிவு

கேட்டறிவைக் கொண்டு முன் பின், வலம் இடம், இந் நான்கு திசைகளிலுமுள்ள சப்தங்களை அறியக் கூடிய சக்தியை நமதாண்டவன் நமக்கமைத்தான். இந்த நன்றிக் காக நாமவனை 'இஷா' என்னும் தொழுகை நான்கு ரக்அத்துகளையும் தொழுதுவிட்டால், அந்த அறிவை நம் காதுகளில் அமைத்த ஆதி ரஹ்மானுக்கு நன்றி செலுத் தினவர்களாவோம் என்பதற்காக வேண்டியே அது பர்லாக்கப்பட்டது.

6-வது பகுத்தறிவு

பகுத்தறிவைக் கொண்டு சகல விஷயங்களையும் அறிந்து கொள்ளக் கூடிய சக்தியை நமதாண்டவன் நம் இருதயத்தில் அமைத்த நன்றிக்காக சுன்னத்து, நபில், வித்ரு இவைகள் போன்ற வணக்கங்களைச் செய்யவேண்டு மென்று சொல்லப்பட்டது. இதற்கு மாறு செய்தால் பாவியாவோம்.

இதற்காகவே மேலே குறிப்பிட்ட தொழுகைகளை இரண்டு ரக்அத்தாகவும், நான்கு ரக்அத்தாகவும், மூன்று ரக்அத்தாகவும் தொழும்படி விதிக்கப்பட்டது.

தன்னையறிதல்

இனித் தன்னை அறியும் அறிவுகள் முன் எழுதியுள்ளவைகளை ஆராய்தல் செய்து. அவைகளை ஆசான்கள் இடத்தை அடுத்துத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும்; உன்னைத் தேடி வராது; நீதான் தேடிப்பிடிக்க வேண்டும். இவ்வுலகப் பொருள் தேட எவ்வளவு பிரயாசை எடுத்துத் தேடுகின்றோம் ? இதைப் பார்க்கிலும் கடுமையான பிரயாசை எடுத்துத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். உன்தேடுதலில் உனக்கு நசீபும் வேண்டும்.

ஆனால் நாம் மறதியாளர்கள்தாம். ஒருவர் நினைப் பூட்டுவது ஒரு அதிர்ஷ்டமென நினைப்பதும், இனியாகிலும் தெளிவடைவதும், இவ்வழியைக் கண்டு தெளிவடைவதும், நாம் ஒவ்வொருவரும் தேடிக்கொள்வதும் முக்கியமல்லவா?

சோதிமணி விளக்கத்தில்

சக்கரத்தரள மணிவிழி நடுவினுனியிலே
சாட்சி காட்டிடு பூரணு-
சபூரு தவ்ருத்து இன்ஜீல் புர்க்கானில்
உருவான சம்பிரதாயங்க ளெல்லாம்
ஹக்கனே நீ யறிவதல்லாது
வேறுமொரு அண்டங்கள் தானறியுமோ
ஐனுக்குள் அலிபாகி ஹக்கான
நுக்தாவின் அஹ்மதே அஹதிருளியே—என்றும்

குணங்குடி அப்பா.

விண்ணுக்குள் வெளியிருண் மாற்றி அதில்
வேதாந்தமூல விளக்கினை யேற்றி

கண்ணுக்குள் மணியாகத் தோற்றி வருங்
காரணமான கடவுளைப் போற்றி
இரக்கத் துணிந்து கொண்டேனே எனக்
கிருக்குங் குரை முழுதும் நிகழ்த்திக்கொண்டேனே
என்றும்

வேறு

பாயுமிராறுகலை பாயாது பக்குவம்
பண்ணி வைப்பது சமாதி
பழவினை யிறக்கவும்
சுழிமுனை திறக்கவும்
பழகி வருவது சமாதி.

என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

காலி மஸ்தான்.

அலிபே லிக்காயி நூறே இலாஹி
ஐனே பக்காயீ அம்ரே அமான்
ஐனே மக்காமில் ஹக்குல் எகீனி
அக்மல் கமாலே சலாமுன் அலைக்கும்
கமால் வுஜூதே கபீவசனதே
காமில் ஷுஹூதே ஹாஸில் மக்காம்
அமானிமானே ஜலால் ஜமாலுள்
அஹதானிமானே சலாமுன் அலைக்

இதுவேறு

அழிவிலா னிருக்குந்தல மதை யறிந்து
யந்தியும் சந்தியு மில்லான்

வழிவகை தெரிந்தே சரத்தினை யிருத்தி
மவ்த்துமுன் மவ்த்தாகிச் சடத்தை
யொழிபடக் காண்போர் வல்லவன் சுவன
வொண் பதிபுகுதுவர் திடனே
பொழிகதிர்த் தெளிவின் முரீதெனு வழியைப்
பொருந்தினோர் நிறை மதம் பெறுவார்.
ஐயெனுங் கலிமா அதுதனைத் தெரிந்தே
ஆசையை அதனிடை கொளுத்தி
ஐனதிலிருக்கும் அழிவிலாப் பொருளை
யகத்தினிற் றெளிந்திடார் நாளை
வியனுறு மலக்குல் மவ்த்திடமாகி
விக்கினப் படுகுவார் திடனே
ஐயெனு மெழுத்தை யுருப்படுத்திடுவர்
அவனது கோல முமறிவார்.

இன்னும் ஞான உதைய புஞ்சத்தில் கடையநல்லூர், ஷெய்க்உதுமான் லெப்பை ஒலியுல்லா கலிபா பாடியதில்,

நாகூத்தில் நவில் மலக் கூத்தில்—இந்த
நாட்டங்கள் நாமென்றும்
நாமல்ல வென்றும்
ஆசையைத் தந்துகொண்டேதான்—பின்னும்
அணுகிடும் ஜபறூத்தில் அறிந்தாலும் பீராய்
நேசத் தெளிவையுங் காட்டி 'நின்று

நேரான லாஹூத்தறியவும் மைய
மாசால ரூப மெடுத்து—வரும்
மாயப்ர சித்தாந்தங் கண்டாயோ தோழி!
ஆமீனல்லாஹூம்ம ஆமீன்.

பன்னிரெண்டா மட்சரத்தில்—உள்ள
பரிவான முதலட்சரத்தைத் திருத்தி
மன்னிய வுள்ளேப் பிறந்தே—அங்கு
வாகிட்ட ஏழுடுக்கான நற்கோட்டை
தன்னிற் சிங்காசனம் போட்டே—யர
சாகவும் எம்பிராண வடிவமுமாகத்
தென்னறை மூலைக்குள்ளாக—நின்ற
சித்திர மாயத்தைக் கண்டுகொள் மனமே
ஆமீனல்லாஹூம்ம ஆமீன்

ஆடுங் கடைத்தெரு வீதி—புலன்
ஐவேடர் கூடிய ஆசார வாசல்
மூடித் திறக்கும் அவ்வாசல்—என்று
மூப்பாகு முப்பத்தி ரெண்டுறுப்புக்கும்
வேடிக்கை கொண்டாறு சாட்டி—இனி
மேலாறு மூச்சுக்கு நேரே கிழக்கே
கூடும் பிரதானிகள் வாசல்—வந்து
கூத்தாடும் நேத்திரங் கண்டாயோ தோழி!
ஆமீனல்லாஹூம்ம ஆமீன்

அண்டாததை அண்டிக் கொண்டால் மீண்டும்
அகலாது போகாது திருநடமாடிக்
கொண்டாடும் வதனக் கண்ணுடி—யந்தக்
கோலத்தை மூவட்ட நடுவிற் கொண்டாடுங்

கண்டார்க்குத் தெரியு மிம்மாயம்—இதைக்
காணுத பேர்கட்கு வகை வகையாக
விண்டாலுந் தெரியா திம்மாயம்—என்று
மேலிட்ட இம்மாய மேலத் தெருவில்
ருென்ருன ருென்றடி வீட்டி— நின்று
சோடித்த மூடியைக் கூடிக்கொள் மனமே
ஆமினல்லாஹு ம்ம ஆமீன்.

இது வேறு

கண்ணின் கருப்பை யகற்றி—மன
துன்னுன் நப்சை வெருட்டி
மின்னின் ஞெளிவைத் திரட்டி—பலங்
கூட்டும் யாரசூலே.

அந்த மின்னின் ஞெளிவுநுட்பம்—மகு
லூக்கறி யத்தானே
அந்த காலிக்கின் லிக்காவை
கண்ணில் காட்டும் யாரசூலே.

அது—அப்துல்லாவின் திலகம்-நல்ல
ஆமீனுவின் னுதிரம்
செம்மையாகப் பிறந்த—நபி
ஜெம்மல் யாரசூலே.

பொருளை இன்னதென்று —நான்
பொய்யில்லாமல் விண்டேன் - அந்த
மெய்ப் பொருளைக் காணக் கண்ணில்
காட்டும் —யாரசூலே.

காயல்பட்டணம் உமர் ஒலியுல்லா கலீபா அருமைக் காரண மாலையில்.

கோமான் குறிகுண மில்லான் தன்னை
கோலம் நூறு முஹம்மது தன்னைக்
குறித்து வணங்கி இணங்கும் முரீதுகள்
குரு அவராகிய ஷெய்கிவ ரென்னும்

குன்கொண்டெ ழும்பயக்கூன் ஷெய்கே
கருவா யெழுந்திடுங் குரு மொழியால்
கருதிய திக்ரில் மறதி கொடாதே
கால்கொண்டோடுக் கழிந்திடுவாசி

கஃபத்துல்லா கண்ணினுள் வாழும்
கலிமாவின் உட்பொருளாகிய ஷெய்கே
மருவும் அஹ்மதின் வழி யறிந்தோர்
மணமது கடலாய் வழிபெற நாலும்

வகையுடன் மெய்யே மர்த்தபா ஏழும்
மறதி கொடாதே மணம் புறிந்தாளும்
மஜ்ஜூது மஹபூபாகிய ஷெய்கே
குருவாய் வரும் முஹம்மதினை

கூடும் வழியறியாதவ ரெல்லாம்
குணமது கல்பாய் காயிமி போலாய்
குறிகேடனுகும் ஹயவான் இன்சான்
கோல முறும் தஷ்பீ ஹறியான்

இதுவும் அவர்கள் சொன்னது.

பண்டு வெளியான தர்ரத்துல் பைலாவில்
பயன் தரும் ஐயினுனோர்
நின்றிடும் நினைவுக்குள் குர்ரத்துல் ஐனை
சிறுத்திடும் மீமானோர்
கண்டு தெளிந்திடக் காட்சிகள் தந்து
கரை யேற்றும் றப்பானோர்
கொண்டாடும் செய்யிது முஹம்மது புகாரி
குத்பாகு மத்லூபுனு.